Registered as a news paper.

பக்கங்கள்: 10+IV = பதினான்கு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 9 (10.07.2003) வியாழக்கிழமை இதழ்: 281

ஆசியாவி ர் நம்பர் 1 சீமேந்து

SLS 10, அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து

ரா ம் கோ

(சி-1147)

## மகனை விரட்டிச் சென்று வெட்டிக் கொன்ற தந்தை!

(பண்டத்தரிப்பு)

தந்தையின் வாள் வெட்டுக்கு இலக்காகி, மகன் உயிரிழந்த பயங்கரச் சம்பவம் ஒன்று ஆனைக்கோட்டையில் நேற்று இடம்பெற்றது.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணிக்கு, ஆனைக்கோட்டை - உயரப்புலத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், ஸ்ரீகாந்தன் தயாளன் (வயது 15) என்பவர் கழுத்து வெட்டப்பட்டு உயிரிழந்தார்.

மதுபோதையிலிருந்த தந்தை - வீட்டிலுள்ள பிள்ளைகளைக் கத்தியுடன் விரட்டியவேளை, மூத்தமகன் அகப்பட்டபோது - அவரைக் கத்தியால் வெட்டிக் கொன்றதாகக் கூறப்படுகின்றது.

கத்திவெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவரை, (10 ஆம் பக்கம் பார்க்க)

## இம்மாத இறுதிக்குள் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்கிறார் பிரட்மன்!

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள், மீண்டும் இம்மாத இறுதிக்குள் ஆரம்பமாகுமென - பிரதம மந்திரியின் ஆலோசகர்களில் ஒருவரான பிரட்மன் வீரக்கோன் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் கோரியிருக்கின்ற இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைபை, இவ்வாரத்திற்குள் விடுதலைப் புலிகளிடம் கையளிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதனால், அநேகமாக, இம்மாத இறுதிக்குள் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகுமென, பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் - விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை மீண்டுமொருமுறை தொடங்குவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதில் அரசாங்கம் நாட்டம் காட்டி வருவதாகவும், பேச்சுக்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

# சங்கரியின் தலைமையைக் காக்க இந்தியா இராஜதந்திர அழுத்தம்!

## லெப்.கேணல் நிர்மலன் உயிர்நீத்தார்

சுகவீனம் காரணமாக, போராளி ஒருவர் சாவடைந்தார். லெப். கேணல் நிர்மலன் (சிவானந்தன் நிர்மலராஜ் - பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்) என்ற போராளியே நேற்று முன்தினம் சாவடைந்தவராவார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## கூட்டணி செயற்குழுக் கூட்டத்தின் முன் தொலைபேசியில் இரகசிய அறிவுறுத்தல்

(கொழும்பு)

**இந்தியாவின் இராஜதந்திர அழுத்தம் காரணமாகவே, அண்மையில் நடந்த கூட்டணிச் செயற்குழுக் கூட்டத்தின் பின்பும், ஆனந்தசங்கரி தொடர்ந்தும் தலைமைப் பொறுப்பில் இருக்கக் கூடியதான சூழ்நிலை நிலவுவதாகத் தெரியவருகிறது.**

கூட்டணியின் தலைமைப் பதவியிலிருந்து ஆனந்தசங்கரியை நீக்குவதற்கு, கூட்டணிப் பிரமுகர்கள் பலர் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக முயற்சி எடுத்து வந்திருந்தனர்.

இவ்வாறான முயற்சிகள், அண்மைக்காலமாக வலுவடைந்து வந்தன. கடந்த ஆறாம் திகதி நடைபெற்ற கூட்டணியின் செயற்குழுக் கூட்டத்தில், மேற்படி விடயம் குறித்து காரசாரமான விவாதம் நடைபெறும் என்றும், ஆனந்தசங்கரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அடுக்கடுக்காக முன்வைக்கப்படும் என்றும் பரபரப்புடன் கூடிய எதிர்பார்ப்பு நிலவியது.

ஆனால், மேற்படி செயற்குழுக் கூட்டம் எந்தவித ஆரவாரமுமின்றி அமைதியாக நடந்து முடிந்தது. ஆனந்தசங்கரிக்கு எதிரான எந்தக் குற்றச்சாட்டும் இக்கூட்டத்தில் முன்வைக்கப்படவில்லை. தலைமைப் பதவியை மாற்றம் செய்வது குறித்து உறுப்பினர்கள் எவரும் வாய்திறக்க (10 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸைப் பிடிப்பதற்காக அவசரமாக முடிந்த கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டம், கடந்த ஞாயிறன்று கொழும்பில் நடைபெற்றபோது - முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படவிருந்த போதிலும், இறுதிநேரத்தில் கட்சியின் கிழக்குப் பிரதேச உறுப்பினர்களின் பஸ் போக்குவரத்து வசதி கருதி, இவ்விடயங்கள் குறித்து எதுவும் ஆராயப்படாமல் கூட்டம் முடிவுக்கு வந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலய விவகாரத்தை மனிதாபிமானத்துடன் நோக்குக!

### தென்னாபிரிக்க ராணுவ அதிகாரி கருத்து

"யாழ்.குடாநாட்டில், படையினரால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினையை, மனிதாபிமானத்துடன் நோக்கவேண்டும். மனிதநேயத்துடன் இப்பிரச்சினைகளை நோக்கினால், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்ந்து பேணப்படுவதென்பது, மனிதாபிமானமற்ற ஒரு செயலாகவே கருதப்படும்."

- இவ்வாறு தென்னாபிரிக்காவின் முன்னாள் இராணுவ அதிகாரி றொக்ஸி வில்லியம் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பில் நேற்று நடைபெற்ற உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விசேட ஆய்வுப் பட்டறையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தை நீக்க அரசாங்கத் தரப்பில் மறுப்பு!

உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்க முடியாது என, அரசாங்கம் அறிவித்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு, முழுமையாக நடைபெற்று சமாதான நிலை ஏற்பட்டாலேயே இவை அகற்றப்படும் என, உயர் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை சமாதானப்படுத்துவதற்காக, பாதுகாப்பு வலயங்களை நீக்கமுடியாது. அவர்கள் எமக்கு உத்தரவிட முடியாது. பொருத்தமான சமயம் வரும்போது மட்டுமே எமது படைகள் அப்பகுதியிலிருந்து அகற்றப்படும். அதுவரை பாதுகாப்பு வலயம் தொடர்ந்திருக்கும் என, அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.நகரிலுள்ள ஞானம்ஸ், சுபாஸ் விடுதிகளிலிருந்து விலகி - ஒதுக்குப்புறமான பகுதிக்கு படை (10 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலவ்சன் வன்னி விஜயம்

கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சன், நாளை கிளிநொச்சிக்கு விஜயம் செய்கிறார்.

அங்கு அவர், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளதுடன், தொடர்ந்தும் இருதினங்கள் வன்னியில் தங்கியிருந்து, களமுனைத் தளபதிகளைச் சந்திப்பதோடு - வன்னியின் பல பகுதிகளுக்கும் சென்று நிலைமையைப் பார்வையிடவுள்ளார்.

## புலிகள் தளபதிகள் – படையதிகாரிகள் திருகோணமலை சூனியப் பகுதியில் சந்திப்பு!

விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கும், இராணுவ அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று, நேற்று மாலை 3.45 மணியளவில், கட்டைபறிச்சான் சூனியப் பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது - திருமலை மாவட்ட சிறப்புத் தளபதி பதுமன், திருமலை மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் செனவீரவைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில், கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சன் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் - விடுதலைப் புலிகள் தரப்பில் திருகோணமலை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பதுமன், திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் மற்றும் தளபதிகளான உதயன், விமல், சமாதான செயலகத்தைச் (10 ஆம் பக்கம் பார்க்க)



திருமலை - கட்டைபறிச்சான் சூனியப்பிரதேசத்தில் நடைபெற்ற சந்திப்புக்கு, புலிகளின் தளபதிகள் வருவதை முதலாவது படத்திலும், கேணல் பதுமனை இராணுவ அதிகாரி செனவீர வரவேற்பதை இரண்டாவது படத்திலும், ரெலவ்சனுடன் புலிகளின் தளபதிகள் கலந்துரையாடுவதை மூன்றாவது படத்திலும், சந்திப்பில் கலந்துகொண்டோரை இறுதிப் படத்திலும் காணலாம்.

Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினால்
# செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் கௌரவிப்பு

## மானுடம் வெல்லும் மாண்புமிகு மனிதர் ஆறு. திருமுருகன்



**என்னை நன்றாக இறைவன்
படைத்தனன்
தன்னை நன்றாக
பணிசெய்யுமாறே.**

எத்தனையோ மனிதர்கள் இப்பூவுலகில் பிறக்கின்றனர். அவர்களில் எல்லோராலும் தனது சமூகத்துக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்ய சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. சந்தர்ப்பம் கிடைத்தாலும் மனம் ஒத்துழைப்பத்தில்லை. கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பொருத்தமாகப் பயன்படுத்தும் மனிதர்கள் ஒரு சிலரே. அவர்களில் ஒருவராக இன்றும் எம் மத்தியிலே பிரகாசித்துக் கொண்டிருப்பவர்தான் எமது மதிப்புக்குரிய செஞ்சொற் செல்வர். ஆறு திருமுருகன் அவர்கள். நாற்பத்தியிரண்டே வயது நிரம்பிய அவர் - ஆன்மீகத்துறையிலும், சமூகப்பணிகளிலும், கல்வித்துறையிலும் தமது வாழ்நாட் பணியினைத் தொடர்ந்தவண்ணமுள்ளார்.

திரு.ஆறுதிருமுருகன் அவர்கள்- 1961 ஆம் ஆண்டு மதிப்புக்குரிய உபாத்தியார் ஆறுமுகம் - ஆசிரியை சரஸ்வதி தம்பதிகளது புதல்வராகக் கோப்பாயில் பிறந்தார். அவர், தனது ஆரம்பக்கல்வியை யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப்பாடசாலையிலும் பெற்றுக் கொண்டார். இடைநிலைக் கல்வியினை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பெற்று, பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாக உயர்வடைந்ததோடு, பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டத்தினை மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் பெற்றுக் கொண்டார்.

இந்த நாட்டிற்குப் பொறியியலாளர்களையும், வைத்தியர்களையும், பட்டதாரிகளையும் அளித்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி - ஊடகத்துறையினரை, எழுத்தாளர்களை, கவிஞர்களை, நல்ல பேச்சாளர்களை எமது மண்ணுக்கு அளிக்கவும் தவறவில்லை. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பெரிய தூண்களைக்கொண்ட பிரார்த்தனை மண்டபம் பல பேச்சாளர்களை உருவாக்கியுள்ளமை நாம் எல்லோரும் அறிந்ததே. இந்தப் பாசறையிலிருந்து பயின்று வெளிவந்து, இன்று உலகறிந்த பேச்சாளராகத் திகழ்பவர் ஆறு. திருமுருகன் அவர்களாகும்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கல்விகற்கின்ற காலத்திலேயே - கல்லூரியில் நடைபெற்ற பல பேச்சுப் போட்டிகளில் கலந்து பரிசில்களை வென்றுள்ளார். அத்துடன், அக்காலத்தில் நடைபெற்ற பிரமாண்டமான சேக்கிழார் பெருவிழாவில் மாணவப் பேச்சாளனாகக் கலந்து எல்லோரது பாராட்டையும் பெற்றுக்கொண்டார்.

அகில இலங்கைக் கம்பன் கழக உறுப்பினராகவிருந்து, கம்பன் கழக விழாக்களில் தனது பேச்சுத் திறமையினை வெளிப்படுத்தியுள்ளார். அதுமாத்திரமல்லாமல், அவரது பேச்சுத் திறமை உலகின் பல பாகங்களிலும் ஒலித்துள்ளது. இலண்டன், கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளிலும் சமயச்சொற்பொழிவுகள், இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றிய வண்ணமுள்ளார்.

இவரது சொற்பொழிவுகள் பல வீடியோ நாடாவாகப் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மேலும் இவரது சொற்பொழிவுகளை ARUTHIRUMURUGAN.COM என்ற இணையத்தில் பார்த்தும், கேட்டும் பயன் பெறக்கூடிய வகையில் இலண்டன் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது அவுஸ்திரேலியாவில் அன்னை பவானி என்பவரால் ஆறு திருமுருகன் அவர்களின் சொற்பொழிவுகள் ஆங்கிலமொழியில் மொழி பெயர்க்கப்பட்டு "ARUTHIRUMURUGAN SPRITUAL LECTURES" என்ற நூல் வடிவாக்கப்பட்டுள்ள செய்தியும், அவரின் சொற்பொழிவாற்றலுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனது சொற்பொழிவுகளுக்காகவோ, அல்லது இலக்கியப் பேச்சுக்களுக்காகவோ மட்டும் அவரைக் கௌரவிக்கவேண்டுமென்று முன்வரவில்லை.

நாம் அவரைக் கௌரவித்துப் பெருமைகொள்ள நினைத்தமைக்கு இதற்கு மேலும் பலவிசேட தன்மைகள் இவரிடம் காணப்பட்டமையே காரணமாகும். இவற்றுள் சிறப்பாக இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது. குறிப்பாக, அவரிடத்து பரவிக்காணப்படுகின்ற மானுடத்தை மதிக்கும் மகாகுணம். இது அவரிடத்து மாத்திரமல்ல, அவரது குடும்பத்தினர்களிடமும் காணப்படும் இயல்பு. மனிதத்துவம் என்பது அவர்களின் மகா சொத்து. மற்றவர்களின் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்தவை. இவற்றை வளர்க்கும் நோக்குடனேயே அவர்கள் குடும்பத் தலைவர் அமரர் ஆறுமுகம் உபாத்தியார் அவர்கள் வாழ்ந்துகாட்டி, பயிற்சியளித்து வழிகாட்டியுள்ளார். அவரின் வழிகாட்டலில் வளர்ந்த செஞ்சொற் செல்வர் அவர்கள், பல அரிய சமூகப்பணிகளை ஆற்றுதல் தனது வாழ்வின் இலட்சியமாகக்கொண்டு வாழ்ந்து வருகின்றார். அவரிடமிருந்து எம்மைக் கவர்ந்த விடயங்களில் இது முதன்மையானது.

இவ்வளவு சமூகத்தை நேசிக்கும், சமூகப்பணியாற்றும் மனிதரை நாம் காண்பதரிது. அவர் கொண்டுள்ள சமூகப்பற்றில் ஒரு துளியையாவது நாம் கொள்வோமேயானால், எமது சமூகத்தின் உயர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் அது பேருதவியாக அமையும் என்பது திண்ணம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அவரைக் கௌரவித்துப் பெருமைகொள்ள முயற்சி எடுத்தமைக்கு வேறு ஒரு காரணமும் உண்டு. அக்காரணம் - கௌரவித்தலுக்கான உரிமையையும் வழங்கிற்று. இன்று எமது மண்ணுக்குவேண்டிய நல்லாசிரியர்களை உருவாக்குவதற்குப் பல்வேறு இடர்பாடுகள் மத்தியிலும் அரும்பாடுபட்டுக் கொண்டிருப்பது யாழ்ப்பாணம் தேசியற் கல்வியியற் கல்லூரி என்றால் அது மிகைபடும் கூற்று அல்ல. மாணவர்களின் உழைப்பு, விரிவுரையாளர்களின் அர்ப்பணிப்பு, சமூகத்தின் அரவணைப்பு ஆகியனவெல்லாம் எமது கல்லூரியின் நல்லாசிரியர்கள் உருவாக்கத்துக்கு உற்றதுணையாகி உதவிவருகின்றன.

ஒரு தடவையல்ல, இரண்டு தடவைகள் செஞ்சொற் செல்வருக்கு நல்லாசிரியர் விருது கிடைத்துள்ளது. 1991 இல் யாழ்.கல்வித்திணைக்களம் இவருக்கு நல்லாசிரியர் விருது வழங்கிக் கௌரவித்தது. இவர் கற்பிக்க ஆரம்பித்தது 1989 இல் ஆகும். கற்பிக்க ஆரம்பித்து, முதல் மூன்று வருடத்துக்குள்ளேயே நல்லாசிரியர் விருதைப் பெற்றுக்கொண்டமை, அவரின் கற்பித்தல் சிறப்புக்குக் கிடைத்த பரிசு என்றே கூறவேண்டும். அதைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு மீண்டும் அவருக்கு நல்லாசிரியர் விருதினை வலிகாமம் கல்வி வலயம் வழங்கிக் கௌரவித்தது. இத்தகைய சிறப்பு ஒருவருக்கு இரு தடவைகள் கிடைப்பதென்பது மிகப்பெரியபேறாகும். செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனுக்கு இது இரண்டு தடவைகள் கிடைத்துள்ளதென்றால் - உண்மையில் அவரின் ஆசிரிய சேவையின் சிறப்பினாலென்றே தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. அப்படியானவொருவரைக் கௌரவிக்க யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு முழு உரிமையும், கடமையும் உண்டு.

**பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**



### யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி
### யாழ்ப்பாணம்

**மூன்று ஆண்டு நிறைவு நிகழ்ச்சி**

**" சிவநெறித்தவமகன் செஞ்சொற் செல்வர்"**

**ஆறு.திருமுருகன் கௌரவிப்பு**

தலைவர் :- வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராசா
(யா.தே.க.கல்லூரி ஆலோசனைச்சபை)

இடம் :- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபம்

காலம் :- 10.07.2003 மாலை 4.30 மணி

### நிகழ்ச்சிகள்

1. மங்கல விளக்கேற்றல்
2. இறைவணக்கம்
3. வரவேற்புரை :- திரு மு. சிவக்குமார் (முகிழ் நிலை ஆசிரியர்)
4 தலைமையுரை
5. ஆசியரை :- I. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
   II. 'அருட்கவி' சீ. விநாசித்தம்பி M.A
   (தலைவர் இந்து சமயப் பேரவை)
6. நயப்புரை :- பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
   (துணைவேந்தர். தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர்)
   பேராசிரியர் க. பாஸ்கரன்
   (இயக்குநர் தத்துவ மையம். தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்)
7. வாழ்த்துரைகள்
   1. திருமிகு இளம்பரிதி
   (அரசியற் துறைப் பொறுப்பாளர் - யாழ். மாவட்டம்)
   2. பேராசிரியர் அ. சண்முகதாஸ்
   (தலைவர் தமிழ்த்துறை - யாழ். பல்கலைக்கழகம்)
   3. திருமிகு. தேவராஜா
   (தலைவர் வணிகத்துறை - யாழ். பல்கலைக்கழகம்)
   4. திருமிகு. மு. ஆனந்தராஜா
   (ஆசிரியகல்வியாளர். யா.தே.க.கல்லூரி)
   5. திருமதி. ஞா. கணேசநாதன்
   (ஆசிரியகல்வியாளர். யா.தே.க.கல்லூரி)
   6. திரு. நி. நவநீதன்
   (முகிழ் நிலை ஆசிரியர். யா.தே.க. கல்லூரி)
8. பட்டமளிப்பும், கௌரவிப்பும்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தின் சார்பில் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களால் விழா நாயகர் ஆறு.திருமுருகன் அவர்கள்

**"சிவநெறித் தவமகன்"**

எனும் பட்டம் வழங்கி கௌவிக்கப்படுவார்.

9. சபையோர் கௌரவிப்பு
   1. திருமிகு. பொ. நடராசா
   (முகாமையாளர். அண்ணா கோப்பி. இணுவில்)
   2. திருமிகு.து.சிவராசா
   (பிரபல வர்த்தகர். இணுவில்)
   3. திரு. ச. புவிச்சந்திரன்
   (முகாமையாளர். வினோ நகைப்பூங்கா. யாழ்ப்பாணம்)
   ஆகியோர் ஆரம்பித்து வைப்பார்கள்.
10. பதிலுரை :- விழா நாயகன்
11. நன்றியுரை:- செல்வி. சி. தர்மிலா (முகிழ்நிலை ஆசிரியர்)

கல்லூரி கீதம்

பீடாதிபதி - உப பீடாதிபதிகள்,
ஆசிரிய கல்வியாளர்கள், பதிவாளர்,
முகிழ் நிலை ஆசியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
ஆலோசனை சபை உறுப்பினர்கள்

**கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ. சங்கம்**

தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர், பணியாளர்கள்.

## துர்க்காதுரந்தரியின் வாழ்த்துச்செய்தி



"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"என்பது புறநானூற்றுப்பாடல் அடியாகும். அமரர் ஆறுமுகம் ஆசிரியர் - தாம் பெற்றபிள்ளைகள் அனைவரையும் சான்றோர் வரிசையில் முந்தியிருக்கச் செய்துவிட்டார். இவர்களிலே ஒருவரே செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன். சொல்லினாலும், செயலினாலும், மனத்தினாலும் தொண்டு பல செய்து கடமையாற்றும் ஆசிரியர் இவராவார். இவருடைய கற்பித்தல் பணியும், சொற்பொழிவுப் பணியும், சமூகப் பணியும் பலராலும் பாராட்டுதலுக்குரியது. தமிழ் பேசும் நல்லுலகமெங்கணும் சென்று தன் சொற்பொழிவினால் யாழ்.மண்ணுக்குப் பெருமை தேடித்தந்தவர் இவர். ஆங்காங்கு கிடைத்த அன்பளிப்புகளை எல்லாம் - இந்த மண்ணின் துயர் தீர்வதற்குக் கருமமாற்றும் நிறுவனங்களுக்கு அள்ளி, அள்ளிக் கொடுத்து உதவியவர். இவற்றை எல்லாம் மனதில்கொண்டு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - இவரைக் கௌரவிக்க இருப்பது வரவேற்கத்தக்கதாகும். கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தமது உயர்ந்த உள்ளத்தினால் இத்தகைய பணிகளை அவ்வப்போது ஆற்றிவருகிறார். கல்லூரியின் மூன்றாவது ஆண்டு நிறைவின் நினைவுப் பேருரைகளும், சான்றோர் கௌரவிப்பும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இந்த மண்ணுக்கு நல்லன செய்து நல்லனபேசி, நல்லவர்களாக நாமும் வாழ்ந்து உயர்வடைவோமாக.

**"அன்பே சிவம்"**

**கலாநிதி செல்வீ தங்கம்மா அப்பாக்குட்டி**

அருட்கவி
சீ. விநாசித்தம்பி M.A.



## சிவநெறித்தவமகன்

*கலையோங்கு யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி
கனிந்த மூன்றாண்டு நிறைவில்
கருதுபல் கலைக்கழகத் துணைவேந்தர் ராய் நின்ற
கண்ணிகர் வித் தியானந்தன், பொன்
மலையோங்கு நல்லறிஞன் சந்திரசேகரம், பண்பு
மாமகன் கை லாசபதி, தம்
வாக்குமனம் காயத்தால் வான்பூத்த பணிசெய்த
மகான் துரை ராஜா என
நிலை யோங்கு பெரியோரை நினைத்துகௌ ரவிப்பதுடன்
நினைவினிய சொல்லின் செல்வன்
நீடுபுகழ் சிவநெறித் தவமகன் - பேரறிஞன்
நிறைஆறு திருமுருகனை
தலையோங்கு பணியினைப் பாராட்டி வாழ்த்திடும்
தகுநிகழ்வும் நிகழ்வுத்துகின்ற
தமனியக் கல்லூரித் தாயேநீ பல்லாண்டு
தபனென வாழி வாழி*

## விழா நாயகனை வாழ்த்துவோர்

**தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம்**

தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர், பணியாளர்கள்,
தெல்லிப்பளை.

**தெல்லிப்பளை
துர்க்காதேவி தேவஸ்தானம்**
தெல்லிப்பளை.

யாழ்ப்பாணம், சுன்னாகம்
பழரசத்தொழிலகம்
**ஐசுபி
தொழிலகம்**
உடுவில்

ஆண்கள் பெண்களுக்குரிய
சைக்கிள்கள் அனைத்தும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
**வெங்கடேஸ்வரா**
125A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரசுரிப்பாளர், வெளியீட்டாளர்
**திருமகள் அழுத்தகம்**
சுன்னாகம்

**C.C.A**
K.K.S வீதி, சுன்னாகம்.
நிர்வாகிகள்

**அம்பாள்
தொலைத் தொடர்பு சேவை**
துர்க்காபுரம்
T.P. 021-2223470

**ஆல் சிலோன்
டிஸ்ரிபியூட்டர்ஸ்**
K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2223470

# சார்க் இனி தேவைப்படமாட்டாது; வேறு பலமான அமைப்பே தேவை!

## இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் கூறுகிறார்



தென்னாசியாவிலுள்ள நாடுகள் அனைத்தையும் இணைந்த பலமான அமைப்பொன்று உருவாக்கப்படும் என்று இந்தியா கூறியிருக்கிறது.

இந்தியத் தலைநகர் புதுடெல்கியில், தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் மத்தியில் உரையாற்றிய இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்

தென்னாசியா ஒன்றியம் (**South Asian Union**) என்ற பெயரில் தென்னாசியாவிலுள்ள நாடுகள் - தமது அரசியல், சமூக பொருளாதார வேறுபாடுகளைக் களைந்து ஒரு பலமான அமைப்பொன்று உருவாக்கவேண்டிய வரலாற்றுத் தேவை தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

அப்படியான அமைப்பு ஒன்றை உருவாக்க நாங்கள் முயற்சிக்க வேண்டும் என்றும், அவர் மேலும் கேட்டுள்ளார்.

தென்னாசிய நாடுகளான - பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைதீவு, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைக் கொண்ட சார்க் அமைப்பு திறமையாகத் தொழிற்படவில்லை என்றும், அது பலவீனமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

எனவே, இந்திய உபகண்டத்திலுள்ள நாடுக்ளிடையே ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குப் புதியதொரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும், இது இந்தப் பிராந்தியத்திலிருந்து வறுமையை ஒழிப்பதற்கும், தேவையற்ற பிரச்சினைகள் எழுவதைத் தவிர்க்கவும் உதவும் என்றும், அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

## வெடிபொருட்கள் பற்றிய வரைபடங்கள் இருந்தும் படையினர் மௌனம்!

(வவுனியா)

வெடிபொருட்களை அகற்ற, வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்தபோதும், வெடிபொருட்களைப் புதைத்த படையினர் பேசாமல் இருக்கின்றனர் என வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

வெடிபொருட்கள் எங்கெங்கு புதைக்கப்பட்டுள்ளன என்பதை வரைபடரீதியாகக் காட்டக்கூடிய சுமார் இரண்டாயிரம் வரைபடங்களை படையினர் வைத்திருக்கின்றனர்.

எனினும், மிதிவெடிகளை அகற்றப் படையினர் தயக்கங்காட்டி வருவதுடன், அதனைச் செய்பவர்களுக்கு ஒத்துழைப்பும் வழங்குவதில்லை என்றும் - வவுனியா மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் எழிலன் மேலும் தெரிவித்தார்

# கிளிநொச்சி வைத்தியசாலை அமைப்பு; தகவல் தரவில்லை ஜப்பான் அரசாங்கம்!

## சுகாதார அமைச்சர் தயாரத்ன விசனம்

ஜப்பானிய அரசாங்கம் கிளிநொச்சி மாவட்டத்தில், ஒரு மாவட்ட வைத்தியசாலையை அமைப்பதற்கு உதவி வருவது நல்லதொரு நிலைப்பாடாக இருந்தபோதும், இப்படியான ஒரு வைத்தியசாலை அமைப்பது பற்றி இதுவரை சுகாதார அமைச்சுக்கு ஜப்பான் எந்த வகையான தகவலையும் வழங்கவில்லையென, சுகாதார அமைச்சர் பி. தயாரத்ன தெரித்திருக்கிறார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தபோது -

கிளிநொச்சியில் இருநூறு படுக்கைகள் கொண்டதொரு அரசாங்க வைத்தியசாலைக்கு நிகரான வைத்தியசாலை கட்டப்பட்டு வருகிறது. இந்த வைத்தியசாலைக்குத் தேவையான உதவிகளை ஜப்பான் செய்து வருவதாகத் தெரியவருகிறது.

இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகள் பாராட்டத்தக்கது. ஜப்பான் முன்னெடுத்து வருகின்ற இந்தச் செயலை நாங்கள் பாராட்டுகின்றோம். ஆனால், இதுபற்றி அரசாங்கத்துக்கு உரிய வகையில் ஜப்பானிய தரப்பினர் அறிவிக்கவில்லை என்றார்.





மட்டக்களப்பு மாவட்டத்தின் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு பேய்த்தாழையில் நடைபெற்றது. இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் முதலாவது கரும்புலி மேஜர் ரங்கனின் திருவுருவப்படத்திற்கு அவரின் தாயார் மலர் மாலை அணிவிப்பதை முதலாவது படத்திலும்,' மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் தேசியக் கொடியினை ஏற்றிவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மட்டு பயணிகள் ரயில் சேவை இனிமேல் நடைபெறமாட்டாது?

மட்டக்களப்புக்கும், கொழும்புக்கும் இடையிலான பயணிகள் ரயில், பயணிகளின்றி பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றுவிட்டது.

வாழைச்சேனைக்கும், ஏறாவூருக்கும் இடையிலான ரயில் பாதையின் ஒரு பகுதியில், சிலிப்பர் கட்டைகள் அகற்றப்பட்டதாலேயே இந்தநிலை ஏற்பட்டதாக ரயில்வே அதிகாரிகள் கூறுகின்றனர்.

வந்தாறுமூலை, பாலச்சோலை கிராமத்திற்கு அருகில், நேற்று ரயில் பாதையின் 17 சிலிப்பர் கட்டைகள் அகற்றப்பட்டிருந்ததால் ரயில் சேவை இடைநிறுத்தப்படடது. இந்த நடவடிக்கையில், ரயில் சேவையை ஸ்தம்பிதம் செய்யும் நாசகார சக்திகளின் செயலாக இருக்கலாம் என, மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லசந்த டீ சில்வா தெரிவிக்கின்றார். எனினும், இதுவரை இந்தச் சம்பவம் குறித்து எவரும் கைது செயயப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, சிலிப்பர் கட்டைகளை மீண்டும் பொருத்துவதற்கு ஊழியர்கள் நடவடிக்கை எடுத்தபோதும், சிலர் அச்சுறுத்தல் விடுத்ததால் அந்தப் பணிகள் கைவிடப்பட்டதாக, ரயில்வேத் திணைக்கள நடவடிக்கைப் பிரிவின் பிரதி முகாமையாளர் கே. ஏ. பிரேமசிறி தெரிவிக்கின்றார். இந்த நிலைமை காரணமாக - நேற்றுமுன்தினம் இரவு மட்டக்களப்பைச் சென்றடைந்த ரயில்- மீண்டும் கொழும்பு நோக்கி வரமுடியாதநிலை ஏற்பட்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

ஆனால், அதன் பின்னர் கிடைத்த தகவல்களின்படி, தற்காலிகமாகத் திருத்தப்பட்ட ரயில பாதையைப் பயன்படுத்திப் பொலிஸ் பாதுகாப்புடன் இந்த ரயில் கொழும்பைச் சென்றடைந்திருக்கிறது. இதனால், மட்டக்களப்புக்கான ரயில் சேவை தொடரும் சாத்தியக்கூறுகள அருகிவிட்டதாக ரயில்வேத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# லொத்தர் சபை பணிப்பாளராக ஜனாதிபதியின் பேச்சாளர்!

இதுவரை காலமும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பேச்சாளராக இருந்துவந்த ஹரீம் பீரிஸ், தற்போது புதிய பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பொறுப்பிலிருந்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கையேற்கப்பட்ட அபிவிருத்தி லொத்தர்சபையின் இயக்குநர்களில் ஒருவராக ஜனாதிபதியின் பேச்சாளரான ஹரீம் பீரிஸ் புதிய பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை, ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் தலைவரான ஜனதாச பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி சம்பந்தமாக வெளியிடப்படும் அறிக்கைகள். மற்றும் அவரது கருத்துக்களை அண்மைக் காலமாக ஹரீஸ் பீரிஸே செய்தியாளர்கள் மாநாட்டில் தெரிவித்துவருவது குறிப்பிடத்தக்கது.

# தேசிய கல்வி அதிகார சபை கலைப்பு; சரியான முறையில் செயற்படவில்லை!

ஆசிரியர்களுக்கான கல்வியை வழங்குவதற்காக இயங்கிவந்த - ஆசிரியர் கல்விக்கான தேசிய அதிகாரசபை அரசாங்கத்தால் கலைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தகவல் தெரிவிக்கையில் -

ஆசிரியர் கல்விக்கான தேசிய அதிகாரசபை இதுவரை மேற்கொண்டுவந்த நடவடிக்கைகள் யாவும், இப்போது வேறு வேறு நிறுவனங்களுக்கு பிரித்து அளிக்கப்பட்டிருக்கின்றது.

தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வியற் கல்லூரிகளுக்கான சபை ஆகியவையே இனிவருங்காலங்களில் ஆசிரியர் கல்வி என்ற கருத்திட்டத்தை முன்னெடுக்க இருக்கின்றன.

இதுவரை காலமும் ஆசிரியர்களுக்கான கல்வி, கற்பித்தல் செயற்பாடுகளை வழங்கிவந்த, ஆசிரியர் கல்விக்கான தேசிய அதிகாரசபை தனது கடமைகளை ஒழுங்காகச் செய்யவில்லை. ஆசிரியர் கல்விக்காக அது ஆற்றிய பணி பிரச்சினைக்குரியதாக இருப்பதாகவே கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

ஆசிரியர் கல்விக்கான தேசிய அதிகாரசபையின் பாடத்திட்டங்களை, பல்கலைக்கழகங்களோ அல்லது தேசிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளோ அங்கீகரிக்கவில்லை.

எனவே, இந்த அதிகாரசபையினால் எந்தவொரு பயனும் இல்லை என்ற நிலையில்தான், அதைக் கலைத்துவிட அரசாங்கம் தீர்மானித்திருக்கிறதெனக் கூறியிருக்கிறார்.

இதேவேளை - மேற்படி அதிகாரசபையில் இதுவரை காலமும் பணியாற்றிவந்த ஊழியர்கள், ஒப்பந்த அடிப்படைகளில் பணியாற்றியமையால் அவர்களது ஒப்பந்த காலம் இடைநிறுத்தப்படுவதுடன், இவர்களில் தகுதியானவர்கள், ஆசிரியர் கல்விககானப் பயிற்சித் திட்டங்களை வழங்குகின்ற ஏனைய நிறுவனங்களுடனும், கல்வி அமைச்சுடனும் இணைந்துகொள்ளப்படுவார்கள் என்றும் கல்வி அமைச்சின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## கறுப்பு தினத்தை பிரகடனப்படுத்த பொ.ஐ.முன்னணி ஏற்பாடு

அரசியற் கொலைகளுக்கு எதிராக, பொதுஜன ஐக்கிய முன்னணி ஒரு கறுப்புத் தினத்தைப் பிரகடனப் படுத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நாளைத் தெரிவு செய்வதற்கு, என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதற்காக, நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தலைமையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழுக் கூட்டம் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் அண்மையில் நடைபெற்றபோதே, இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

# பெண்ணைப் போல் நடித்து வந்த பிரபலமான ஆண் குற்றவாளி!

## பெண்கள் சிறைப்பிரிவிலும் தங்கியிருந்தாராம்

(கொழும்பு)

கொலைகள், போதைப்பொருள் வியாபாரம் போன்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவரெனக் கூறப்படும் நபர் ஒருவர், பெண்ணைப் போன்று வேடம் தரித்து, சிறைச்சாலையில் பெண்கள் பிரிவீல் இருந்தமை குறித்து விரிவான விசாரணைகளை நடத்தவுள்ளதாகச் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் றூமி மர்ஷூக் தெரிவித்துள்ளார்.

இந்த நபர் 200 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டபோது, கவுண் அணிந்து பெண்ணைப்போல் வேடம் தரித்திருந்ததாகப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். இவரை - பெண் பொலிஸார் சோதனையிட்டபோதே, அவர் ஆண் என்பது தெரியவந்ததாக அந்தப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

இவர் ஏற்கனவே சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில் தண்டனை அனுபவித்து வந்தது குறித்து, போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் விபரங்களைக் கோரியுள்ளதாக, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். மேலும், இவ்வாறான ஆள்மாறாட்டம் தொடர்ந்தும் இடம்பெறாதவாறு, கடுமையான சோதனை நடவடிக்கைகளை நடத்துமாறும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தனது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# யுத்தத்தை ஆரம்பிக்கும் நோக்கம் விடுதலைப் புலிகளுக்கு கிடையாது!

## அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் தங்கன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

"இராணுவபலத்தின் அடிப்படையில் அடையப்பெற்ற வெற்றியின் பின்னணியில், இன்றைய போர்நிறுத்த வேளையில் ஓர் அரசியல் யுத்தத்தில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் ஒருபோதும் சமாதானத்திற்கு விரோதமானவர்களல்ல. ஆனால், அதிகாரரீதியாகப் பிளவுபட்ட அரசாங்கம் - விடுதலைப் புலிகளைப் போர்நிறுத்த மீறல்களின் மூலம் மீண்டும் ஒரு யுத்தத்திற்குத் தூண்டிவிடுகிறது" என விடுதலைப் புலிகளின் அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பிலிருந்து விலகி, அதிகாரபலமுள்ள ஓர் நிர்வாகக் கட்டமைப்பை அரசாங்கம் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தின் மீள்கட்டமைப்புக்கும், புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகளுக்குமாக வழங்குவதற்கு முன்வரவேண்டும். இதுவே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும், எதிர்பார்ப்பும் ஆகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை தலைமையில - வவுனியா பூந்தோட்டம் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இந்தக் கரும்புலிகள் நாள் வைபவம் இடம்பெற்றது. அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

விடுதலைப் புலிகள் வேறு, மக்கள் வேறு அல்ல. மக்கள்தான் விடுதலைப் புலிகள், விடுதலைப் புலிகள்தான் மக்கள். ஆயுதப் போராட்டத்தின்மூலம் அரசுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் நாம் பலமுள்ளவர்கள் என்பதை நிரூபித்தோம். அதன் அடிப்படையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் இயல்புநிலை ஏற்படுத்தப்படவேண்டும் என்பது, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையான இணக்கப்பாடாகும்.

அரசியல்ரீதியாகப் பிளவுபட்டுள்ள இலங்கை அரசு, போர்நிறுத்த மீறல்களை மேற்கொண்டு - விடுதலைப் புலிகளை மீண்டுமொரு போருக்குத் தூண்டிவருகிறது. ஆனால, நாங்கள் சமாதானத்தின் மீது பற்றுக்கொண்டு, பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

ஆனால், முப்படைகளுக்கும் தளபதியாக விளங்கும் ஜனாதிபதி சந்திரிகா - கடலிலும், தரையிலும் படைகளைத் தூண்டிவிட்டு, விடுதலைப் புலிகளைச் சீண்டிக்கொண்டிருக்கிறார்.

இதனை ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் கண்டும் காணாமலும் நடந்துகொண்டிருக்கிறது.

மீண்டுமொரு போர் தொடங்குமானால் - அரசாங்கத்திற்கு இந்தியாவும், அமெரிக்காவும் ஆதரவாகச் செயற்பட்டு, புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளில் உதவிசெய்யும் என்று அரசாங்கத் தரப்பில் பகிரங்கமாகப் பேசப்பட்டு வருகிறது. சமாதானத்தில் நம்பிக்கை இருந்தால், சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தால், இவ்வாறு ஏன் பேசப்படுகின்றது?

எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே நாங்கள் ஆயுதப் போராட்டத்தை நடாத்தினோம். தற்போது பலமான ஒரு நிலைப்பாட்டிலிருந்தே சமாதான முயற்சிகளில் ஈடுபட்டோம். சமாதான வேளையில் அரசியற்போராட்டத்தை நடாத்தி வருகிறோம். மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கும் நோக்கம் எமக்குக் கிடையாது என்றார்.



**மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற நாடக விழாவில் - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரியின் பழைய மாணவரும், நாடக இயக்குநருமான "இயக்குநர் மாமணி" அ.நற்குணசேகரன் உரையாற்றுவதையும், அருகில் அதிபர் சண்முகநாதன் மற்றும் விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.**

# வைத்தியசாலை சிற்றூழியரின் ஆபத்துக் கொடுப்பனவு அதிகரிப்பு

## சகல வைத்தியசாலைகளுக்கும் சுற்றுநிருபம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றிவரும் சிற்றூழியர்களுக்கான ஆபத்துக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மனநோய் வைத்தியசாலை, தொழுநோய், மார்புநோய் வைத்தியசாலைகள் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, எஸ்ரே பிரிவு, புற்றுநோய் விடுதிகள் ஆகியவற்றில் கடமையாறறும் சிற்றூழியர்களுக்கு - இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த ஆபத்துக் கொடுப்பனவு, நாற்பது ரூபாவிலிருந்து நூறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைச் சிற்றூழியர்களும் நடாத்திய போராட்டத்தினை அடுத்தே இந்த அதிகரிப்பு வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகச் சகல வைத்தியசாலைகளுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பு - ஜூன் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதே வேளை, யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்களுக்கு இந்த ஆபத்துக் கொடுப்பனவான 40 ரூபாவும் இதுவரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சின்னஞ்சிறு செய்திகள்

### திரைப்படம் தொடர்பான கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் - மாதாந்தம் இடம்பெற்றுவரும் திரைப்படம் தொடர்பான கருத்தரங்குத் தொடரின் மூன்றாவது தொடர் - நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு ஜும்மாப் பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக சிற்றிஹோலில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் அ.யேசுராசா தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படிக் கருத்தரங்கில் - கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் 'தமிழ்த் திரைப் படங்களில் நடிப்பு' எனும் பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார். கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.'

### குரு பூர்ணிமா ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குருபூர்ணிமா ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன.

அன்று அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி, நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறவுள்ளது. அத்துடன், வட பிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக்குழுச் செயலாளர் ப.ஜெகராஜசிங்கத்தின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

### வீதிப் பெயர்ப்பலகைகளில் சிங்களமும் இணைப்பு

(ஆழியவளை)

யாழ்ப்பாணத்திலுள்ள வீதிகளின் பெயர்ப்பலகைகள் சிங்கள மொழியிலும் எழுதப்படவுள்ளன.

தற்போது இங்குள்ள வீதிகளின் பெயர்ப்பலகைகள் - தமிழிலும், ஆங்கிலத்திலும் மாத்திரமே எழுதப்பட்டுள்ளன. இனிமேல் சிங்களமொழியும் இதில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

(122)

# சர்வதேச செஞ்சிலுவையுடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர், கீழ்க் குறிப்பிடப்பட்டவர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

திருமதி ரேவதி கிருஷ்ணறாஜா (233, 6 ஆம் குறுக்குத்தெரு, மணியம் தோட்டம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்), திருமதி ஜானகி பிரான்சிஸ் (15, மத்தியகிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்), திருமதி அமலராணி குருநாதன் (64/1 புகையிரத நிலைய வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்), செல்லையா பிரான்சிஸ் (219, 6 ஆம் குறுக்குத்தெரு, மணியம் தோட்டம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்), செல்வி மலர் பௌலிஸ் (91/9 டேவிற் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்), திருமதி தியாகராஜா தனலஷ்மி (கல்வளை பிள்ளையார் கோயில் தெற்கு வீதி, சண்டிலிப்பாய்.)

# சின்னஞ்சிறு செய்திகள்

### சுபத்திரன் கொலை வழக்கின் சந்தேகநபர்கள் விடுதலை!

ஈழமக்கள் புரட்சி விடுதலை முன்னணி - வரதர் அணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சுபத்திரன் கொலை வழக்கின் சந்தேகநபர்கள் இருவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி வழக்கு யாழ். நீதிமன்றத்தில் விசாணைக்காக நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேகநபர்கள் சாபில் சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு வாதிட்டார். அரசதரப்பில் சட்டத்தரணி செல்வி கந்தசாமி ஆஜரானார்.

இதனையடுத்து, நடந்த விசாரணைகளைத் தொடர்ந்து - சுபத்திரன் கொலைச் சம்பவத்தில் கைதாகியிருந்த வேமபடி மகளிர் கல்லூரி காவலாளிகள்ான மு.முத்துக்குமாரன், பா.இளங்குமரன் ஆகிய இரு சந்தேகநபர்களையும் தலா இரண்டு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்வதற்கு யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டார்.

(க)

### தமிழகத்திலிருந்து 13 அகதிகள் நெடுந்தீவுக்கு வந்தனர் !

தமிழகத்திலிருந்து 9 குடும்பங்களைச் சேர்ந்த 13 இலங்கை அகதிகள் - நேற்று அதிகாலை 5 மணியளவில் நெடுந்தீவை வந்தடைந்தனர்.

இவர்களுக்கான உணவு, தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்த நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் - நேற்று மாலை இவர்களை யாழ். அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# பகுப்பாய்வுத் திணைக்களத்தில் தேங்கிக்கிடக்கும் பணிகள்!

## வெற்றிடங்கள் நிரப்பப்படாததால் அவலநிலை

(கொழும்பு)

அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்தில் கடந்த காலங்களில் புதிய ஆட்சேர்ப்பு எவையும் செய்யப்படாததால், அங்குள்ள வெற்றிடங்கள் இன்னமும் நிரப்பப்படாமல் இருக்கின்றன.

இலங்கை முழுவதிலும் நடைபெறுகின்ற குற்றச்செயல்கள் சம்பந்தமான பகுப்பாய்வு வேலைகளைச் செய்வதற்கு 26 ஆராய்ச்சியாளர்களே கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் சுமார் இரண்டாயிரம் பகுப்பாய்வுப் பணிகள் மேலதிகமாகத் தேங்கி வருவதாகவும், இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கும், அமைச்சர்களுக்கும் கோரிக்கை விடுத்தும் -

இதுவரை அவை எதுவும் நிறைவேற்றப்படவில்லை எனவும் அரசாங்கப் பகுப்பாய்வாளர் கே.சிவராஜா தெரிவித்தார்.

இந்தப் பணிகளுக்காக உடனடியாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக -

விஞ்ஞானமாணிப் பட்டதாரிகளிலிருந்து 17 பேரை நியமிக்க வேண்டியிருப்பதாகவும், இவர்கள் இரசாயனவியலில் சிறப்புப் பட்டம் பெற்றிருப்பது அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி நவாலிப் பகுதியில் சிரமதானம்

(நவாலி)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி. தென்மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசங்கள் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள சிரமதானப் பணிகள் - நாளை தொடக்கம் தொடர்ந்து மூன்று நாட்கள் வரை நடைபெறவுள்ளன.

இச்சிரமதானப் பணிகளின் கீழ் காக்கைதீவு, கரையாம்பிட்டி மயானங்களும், நவாலி கிழக்கு சங்கையன் வாய்க்கால் போன்ற இடங்களும் துப்புரவு செய்யப்படவுள்ளன. இதில் வலி-தென் மேற்குப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும் இணைந்து கொள்ளவுள்ளன.

### அடையாள அட்டை கண்டெடுப்பு

காளிகோயில் வீதி, சங்கானை என்னும் முகவரியையுடைய திரு ஞானசம்பந்தன் முகுந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு, நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

# யாழ். இந்துக் கல்லூரி நூலக எழுச்சி வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி கலை மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "நூலக எழுச்சி வாரம்" கடந்த திங்கட்கிழமை தொடக்கம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இக்காலப் பகுதியில் ஈழத்தின் தலைசிறந்த பல இலக்கியவாதிகளிடமும், ஏனையோரிடமுமிருந்து சேகரித்த பெறுமதிவாய்ந்த பல நூல்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள நூல்கள் கையளிப்பு நிகழ்வில் அதிபர் ஊடாக கல்லூரி நூலகத்துக்கு வழங்கப்படவுள்ளது.

# நெற்கெழு சங்கம் உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டன!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கொம்மாந்தறை நெற்கெழு கிளையில் நேற்று முன்தினம் இரவு பெறுமதியான பல பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பத்தின்போது, சங்கத்தின் கதவின் பூட்டை உடைத்து, பொருட்கள் களவாடப்பட்டபின் கதவினை முன்பிருந்ததைப் போன்று திருடர்கள் பூட்டிவிட்டுச் சென்றதாகவும், மறுநாள் காலை 9 மணியளவில் முகாமையாளர் வந்து பார்த்தபோதே, பொருட்கள் திருட்டுப்போனமை தெரியவந்ததாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு முன்னரும் ஒருமுறை இக்கடை உடைக்கப்பட்டுப் பொருட்கள் களவாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(124)

உழைப்போம் உயர்வோம்!
தொழில் மலர்

# தென்பகுதி உற்பத்திகள் மீதுதான் மக்களுக்கு மோகம் அதிகம்

**யாழ்ப்பாணத்தில் இரு தலைமுறைகாலமாக, 'கலாஸ்' நிறுவனம் உள்ளூர் சோடா உற்பத்தியில் ஈடுபட்டுவருகிறது. இதன் தற்போதைய உரிமையாளர் வி.தயானந்தன், தனது தொழிற்துறை அனுபவங்கள் பற்றி 'நமது ஈழநாடு' தொழில்மலருக்கு வழங்கிய நேர்காணல்.**



**உங்களின் ஆரம்பகால தொழில் அனுபவங்கள் குறித்துக் கூறமுடியமா?**

ஆரம்பகாலத் தொழிலனுபவங்கள் குறித்து என்னால் முழுமையாகக் கூற முடியாதுள்ளது. ஏனெனில், எனது தகப்பனாரினாலேயே இத்தொழில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவர் அன்ரன் மச்சாடோ என்ற சோடாக் கொம்பனியில் வேலை பார்த்துவந்தார். பின் அக்கொம்பனி மூடப்பட்ட வேளையில், அங்கிருந்த இயந்திரங்களை வாங்கி, தனிப்பட்ட முறையில் 'கலாஸ் குளிர்பான ஸ்தாபனம்' என்னும் பெயருடன் இநதக் கொம்பனியை ஆரம்பித்தார். அதையே நான் தொடர்ந்து செய்துவருகின்றேன்.

**இந்தத் தொழிற்துறையை விரும்பி ஆரம்பித்தமைக்கான காரணங்களைக் கூறமுடியுமா?**

எனது தகப்பனார் இத்தொழிலை செய்து வந்தமையால், அத்தொழிலை விருத்தி செய்யும் நோக்குடன் இத்தொழிலைத் தொடர்ந்தேன். ஆயினும், கூடுதலான அபிவிருத்தியை நாட்டின் சூழ்நிலை காரணமாக மேற்கொள்ள முடியவில்லை. எனவே, அத்துடன் சேர்த்து ஐஸ்கிறீம் உற்பத்தியையும் ஒரு சில வருடங்களின்முன் தொடர்ந்தேன்.

**உங்களின் உற்பத்திகள் தென்பகுதி உற்பத்திப் பொருட்களுடன் சந்தையில் போட்டியிட முடிகிறதா?**

போட்டியிடமுடியும். ஆனால், எம்மைப் பொறுத்தவரையில் மக்களைக் கவரும் - அதாவது, சோடா உற்பத்தியை எடுத்துக்கொண்டால், சோடா அடைப்பதற்கான போத்தல்கள் போன்றவற்றை இங்கு எம்மால் பெறமுடியாது. அவற்றைத் தென்பகுதியிலிருந்தே இங்கு கொண்டுவரவேண்டிய நிலையுள்ளது. அத்துடன், தென்பகுதிப் பொருட்களுக்கு இங்கு அதிக கிராக்கியுள்ளது. இப்பகுதி மக்கள் - தென்பகுதிப் பொருட்கள்மீது மிகுந்த மோகம் கொண்டுள்ளமையினால், எமது பொருட்களை விற்பனை செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. இங்கு நாம் எவ்வளவு தரமான பொருட்களைத் தயாரித்தாலும், விற்பனை செய்வதில் சிரமம் உள்ளது.

**உங்கள் தொழிற்துறையை விருத்தி செய்யக்கூடிய சூழல் தற்போது உள்ளதா?**

ஆம். அப்படியான சூழல் உள்ளது. சிரமங்களுக்கு மத்தியிலேயே நாம் செய்ய வேண்டியுள்ளது. ஏற்கனவே ஏற்பட்ட இழப்பீடுகளைக் கருத்திற்கொள்ளும்போது, நாம் கூடுதலான முதலீடுகள் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

**உற்பத்தியை அதிகரிக்கவும், இலாபத்தை அதிகரிக்கவும் நீங்கள் என்னசெய்யமுடியும்?**

தென்பகுதியிலிருந்து தற்போது கூடுதலான பொருட்கள் இங்கு வருவதனால், சந்தைப் படுத்தல் மிகவும் கடினமாக உள்ளது. அத்துடன், எம்மக்கள் மத்தியில், உள்ளூர் உற்பத்திகள் என்ற தப்பான எண்ணம் உள்ளது. அது அவர்கள் மனதிலிருந்து நீக்கப்படவேண்டியது அவசியம்.



**உங்கள் தொழிலில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கூறமுடியுமா?**

சந்தைப்படுத்தலே எமது பிரதானமான பிரச்சினையாக உள்ளது. அடுத்து, காலத்தோடு மாறக்கூடிய நவீன உபகரணங்களின் அறிமுகம், கவர்ச்சியான முறையிலான சந்தைப் படுத்தல் போன்றவற்றை எம்மால் நடைமுறைப்படுத்த முடியாமலுள்ளது. இதற்கு ஆதரவு எமக்கு எவ்வகையிலும் கிடைக்கவில்லை. காலத்துக்கேற்ற முறையிலான உற்பத்தியைச் செய்யமுயல வேண்டும். இயலுமானவரை குறைந்த முதலீட்டுடன் கூடிய வருவாயைப் பெறக்கூடிய வழிமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

நேர்காணல் - விக்கி.

# கத்தரி இனங்களும் மதிப்பீடு செய்தலும்

யாழ்.மாவட்டத்திலே தனிப்பயிராக உள்ளூரில் சேகரிக்கப்பட்ட சில கத்தரி இனங்களைக்கொண்டு- சாதாரணமாக விவசாயிகளினால் கைக்கொள்ளும் முறையில் பயிர்செய்யப்பட்டு, வளர்க்கப்பட்டுப் பெறப்பட்ட தகவல்களைக்கொண்ட இக்கத்தரி இனங்களைப் பற்றிய மதிப்பீடுகளும், கணிப்பீடுகளும், தகவல்களும் - திருநெல்வேலியிலுள்ள விவசாயி ஒருவரின் தோட்டத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டு பெறப்பட்டன. இந்த ஆராய்ச்சியானது, கடந்தவருடம் 2002 ஐப்பசியில் ஆரம்பிக்கப்பட்டு, முழுமையான தகவல்கள் பெறும்பொருட்டு, 2003 தை முதல் சித்திரை - வைகாசி மாதம்வரை செய்யப்பட்டது.

இந்த வகையில் நம் நாளாந்த உணவில் மரக்கறிகள் உள்ளெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதன்மூலம் உடல் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் அவசியமான பல்வேறு பேர்சணைப் பொருட்கள், சத்துக்கள் பெறப்படுகின்றன. இவற்றில் எமது விசேட தினங்களிலும், தினசரி உணவிலும் முக்கிய முன்னுரிமை பெறும் மரக்கறி வகைகளில் ஒன்றுதான் "கத்தரிக்காய்". இம்மரக்கறியானது, பல்வேறு நாடுகளில் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

ஐரோப்பாவில் "முட்டைத் தாவரம்" (Egg Plant) என்றும், "ஆபேஜின்" (Aubergine) என பிரான்ஸ் மொழியிலும் கத்தரிக்காயானது சிங்களத்தில் "வம்பத்து" (Vambattu) என்றும் அழைக்கப்பட்டாலும், எம்மூரிலேயே இடத்துக்கிடம் பல்வேறு இனங்களில் காணப்படும் இக்கத்தரிக்காய் பல்வேறு நிறங்களில், தோற்றத்தில் பயிரிடப்படும் இடங்களின் பெயரைக் கொண்டு- முகிழ்நிறம், தாவரத்தின் தோற்றம், தன்மை என்பவற்றைக்கொண்டு பெயர்சூட்டி பலவகையிலும் அழைக்கப்படுகின்றது.

இந்த வகையில் உள்ளூரில் சிபாரிசு செய்யப்பட்ட இனங்களாக- திருநெல்வேலி ஊதா, பழுகாமம் ஊதா, பாதகொட (Padagoda), SM 164 லீனா இறி (Lena Iri) என்பனவும், உள்ளூர் இனங்களாக - மட்டுவில் வெள்ளை (மட்டுவில் முட்டி), கொடிகாமம் ஈக்கில், தம்பசிட்டிக் கத்தரி, கத்திப்பிடி வெள்ளை, கத்திப்பிடி நீலம், நீலமுகிழ் கத்தரி, ஊதா முகிழ் கத்தரி, கட்டை ஊதா கத்தரி, நீள ஊதாக் கத்தரி, சிறிய குண்டு ஊதாக்கத்தரி, வெளிர் ஊதாக்கத்தரி, முள்ளுக்கத்தரி எனப் பலவகையில் காணப்படும். இவற்றில் பிரதேசதத்துக்கு ஒத்துப்போகும் தன்மை, விளைதிறன் அவற்றின் தோற்ற இயல்புகள் பற்றிய சரியான தகவல்களைக்கொண்டு மதிப்பீடுகளோ, கணிப்பீடுகளோ பெறப்படமுடியாமையினால், இனங்களைப் பற்றிய மதிப்பீடாக இந்த ஆராய்ச்சி செய்யப்பட்டது.

இந்த ஆராய்ச்சிக்குப் பின்வரும் நோக்கங்கள் காணப்பட்டது.

1. யாழ்.மாவட்டத்தில் காணப்படும் சில உள்ளூர் இனங்களை அறிந்து அடையாளப் படுத்தல்.
2. இந்த வகையான இனங்களில் புதிய முறை நிலைகள், இனப்பெருக்க நிலைகள் பற்றிய கற்கை.
3. இந்த வகையானவற்றில் காணப்படும் சில இயல்புகளின் பரம்பரைகளுக்குக் கடத்தப் படும் இயல்புகளைக் கணித்தலும், கற்றதும்.
4. உள்ளூரில் சேகரிக்கப்படும் இனங்களை இலகுவில் அறியக்கூடிய கிளைசாவியினைத் தயாரித்தல்.
5. இவ்வகைகளின் காலநிலைக்கும், பிரதேசத்துக்குமான ஒத்துப்போகும் தன்மை, விளைவுத்திறன் சாதாரண பயிரிகை முறையில் அறிதல்.

இந்த ஆராய்ச்சிக்கான உள்ளூர் கத்தரி இனங்களும், சிபாரிசு செய்யப்பட் இனங்களும் பல்வேறு பிரதேசங்களிலிருந்து பெறப்பட்டன. இதில் எமது மக்களால் பெருமளவில் விரும்பிக் கொள்வனவுசெய்யப்படும் கவர்ச்சிகரமான, பளபளப்பான ஊதாநிற நீண்ட காய்களைத் தரும் "திருநெல்வேலி" ஊதா சிபாரிசு செய்யப்பட்ட இனம்- ஒப்பீட்டு இனமாக கொண்டு, மேலும் ஒரு சிபாரிசு செய்யப்பட்ட இனமான பழுகாமம் ஊதாவுடன், உள்ளூர் இனங்களான கத்தரி பிளாஸ்ரிக் இனம், சிறிய குண்டு ஊதாக் கத்தரி இனம், வெளிர் ஊதாக் கத்தரி இனம், மட்டுவில் வெள்ளைக் கத்தரி, நீளக்கரு ஊதாக் கத்தரி என்பன பரிசோதனை செய்யப்பட்டன.

இந்த ஏழு இனங்களும் தனிப்பயிராக எழுந்தமானமாக முழுமையாகப் பிரிக்கப்படல், மூன்று நிறங்களில் (மூன்று தடவை - 3 Replication) 21 பாத்திகளில் வளர்க்கப்பட்டன. பயிர்ச்செய்கையில் விவசாயி சாதாரணமாகக் கைக்கொள்ளும் நடவடிக்கைகளே செய்யப்பட்டன. இந்த வகையில், இந்த ஏழு வகையினங்களும், தமக்கிடையே தோற்ற அமைப்பில் பல்வேறு வேறுபாடுகளைக் காட்டின. இதன்மூலம் இவற்றை இலகுவில் பிரித்தறியக்கூடியதாக இருந்தது.

ஆய்வுக் கணிப்பீடுகளின்படி (ANOVA), இவை பின்வரும் இயல்புகளில் சிறப்பான, அதிகளவிலான வேறுபாடுகளைத் தம்முள் காட்டின. இலையின் நீளம், இலையின் அகலம், இலைக்காம்பின் நீளம் - தாவரத்தின் முதன்முறையாக 50 வீதமான தாவரங்கள் பூக்கும்போது, தாவரத்தின் உயரம், அகலம், இவ்வாறு பூக்க எடுக்கும் காலம் மேலும் 50 வீதம் மரங்களிலிருந்து முதற்தடவையான காய்கள் ஆயும்போது (அறுவடை செய்யும்போது), தாவரத்தின் உயரம், அகலம், அறுவடை செய்யப்பட்ட காய்களின் எண்ணிக்கை, நிறை, விளைவுத்திறன் என்பன அறிவதாகும்.

எனினும், முக்கியமான முடிவு என்னும் பட்சத்தில் "உள்ளூர் இனம் 2" எனப் பெயரிட்ட சிறிய குண்டு ஊதாகக் கத்தரியினம்- பலூன் போன்ற காய்களை நடுகையின் பின், ஏனையவற்றுடன் ஒப்பிடுகையில் குறைந்த நாட்களிலேயே (46 நாட்களில்) 50 வீதமான பயிர்கள் பூத்ததுடன், திருநெல்வேலி ஊதாக் கத்தரியினம் ஒப்பீட்டு இனத்திலும் பார்க்க, இருமடங்கு காய்களையும், நிறைவிளைச்சலையும் தந்து முன்னணி வகித்தது.

இதுமட்டுமல்ல எமது கத்தரிப் பயிர்ச்செய்கையில் முக்கிய பீடைத்தாக்கமான காய், தண்டு, துளைப்பான் பாதிப்பு - காய்களில் 16 வீதம் மட்டுமே காணப்பட்டது. இந்த அந்தின் தாக்கம் திருநெல்வேலி ஊதாக் கத்தரி இனத்தில் 57 வீதமாகக் காணப்பட்டது.

எனவே, இவ்வினமானது விளைச்சலிலும், உள்ளூர்காலநிலை, பயிர்முறைக்கும் தேர்ந்ததாகச் சிறந்து காணப்படுகிறது. எனினும், இதனைத் தெரிவுசெய்து முடிவான முடிவுகளைப் பெறுவதற்கும், மேலும் ஆராய்ச்சிகள் செய்யப்பட வேண்டும்.

ஏனெனில், இந்த ஆராய்ச்சி குறுகிய காலத்தில் - தனிப்பயிர்செய்கையாக - சரியான உள்ளூர் நடுகையின் காலத்தில் இல்லாது செய்யப்பட்டது. எனவே, பல்வேறுபட்ட பயிர்களுடன் ஊடுபயிர்ச்செய்கை, கலப்புப் பயிர்ச்செய்கை எனச் செய்யப்பட்டு, பூச்சி பீடைத்தாக்கம் குறைக்கும் வகையிலும், சிறப்பான விளைச்சலைப் பெறும் வகையிலும் செய்யப்படுதலுடன், மேலும் உள்ளூரில் கிடைக்கும் கத்தரி இனங்களையும் சேகரித்து ஆராய்ச்சி விரிவுபடுத்தப்படுதல் வேண்டும்.

இந்த இனங்களின் அழிவினைத் தவிர்க்கும்வகையில், சரியானமுறையில் பாதுகாப்புச் செய்யப்பட்டு, தகவல் பெறப்படல் வேண்டும். இதன்மூலம் பீடை, பூச்சி எதிர்ப்பு - காலநிலைக்கு ஒத்துப்போதல், வீரியம் காணப்படல் போன்ற இயல்புகளைக் கண்டு கொண்டு, இவற்றை எதிர்கால ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி, எமது விவசாயத்தை முன்னேற்றப் பாதைக்கு எடுத்துச்செல்ல பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

**உமையாள் தர்மராஜா**
விவசாய உயிரியற்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# தொழில் வங்கி



| நிறுவனம் | இலங்கை மின்சார சபை மனிதவளங்கள் கிளை | வடக்கு - கிழக்கு மாகாண சபை (NECORD) |
| --- | --- | --- |
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | கணக்காளர் | மாவட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் பதவி (யாழ்.மாவட்டம்) |
| அடிப்படைத் தகுதி | 1) ICA/CIMA அல்லது ACCA நிறுவனங்களின் இடைநிலைப் பரீட்சை அல்லது 2) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் டிப்ளோமா சான்றிதழ். 3) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் கணக்கியல் பட்டம் பெற்ற பட்டதாரி. | கல்வித் தகைமை, தொழில் சார் தகைமைகள், முன்னைய தொழில் விபரங்கள், முன்னைய அனுபவங்கள். |
| விண்ணப்ப முடிவு திகதி | 17.07.2003 | 18.07.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# தாயகத்தின் தொழில்நுட்ப புரட்சியின்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

02. இவ்வாறு எழுத்துப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, நேர்முகப் தேர்வு (Interview) ஒன்றுக்கு அழைக்கப்படுவர். இந்த நேர்முகத்தேர்வானது இரண்டு மணித்தியாலங்கள் கொண்டதாக அமையும்.

(A) நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர், தனக்கு ஒதுக்கப்பட்ட நேரததுக்குச் சமுகம் கொடுத்தலவேண்டும். அவ்வாறு சமுகம் கொடுப்பவர் முதலில் பதிவாளர் அறையில் தாய்மொழியல் அவரது கல்விச் சான்றிதழ்கள் பரிசோதிக்கப்பட்டு, அந்நிறுவனத்தின் பூட்கைகள் தெளிவுபடுத்தப்படும்.

(B) பதிவாளர் அறையில் தமது நேர்முகத் தேர்வினை முடித்தவர்கள், நிறுவன இயக்குநர் அறைக்கு அழைக்கப்பட்டு ஆங்கிலமொழியில் உரையாட வேண்டப்படுவர். அங்கு பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிப்பதற்காகப் பொது மற்றும் கணினி சம்பந்தமான பல வினாக்கள் கேட்கப்பட்டு, அவர் கற்க விரும்பும் துறை, தேர்வு செய்யப்பட்டு மாணவர் தகுதிநிலை அறியப்படும்.

(03) நேர்முகத் தேர்வில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு பதிவுத் தபாலில் முடிவு அறிவிக்கப்பட்டு, குறிப்பிட்ட திகதிக்குள் பதிவினை மேற்கொள்ள வேண்டப்படுவர்.

**ஒருவர் பதிவினை மேற்கொள்வதற்குப் பின்வரும் தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

(A) இக்கற்கைநெறி 9 மாதங்களைக் கொண்டது. எனவே, ஒருவர் வேறு எந்தத் தொழிலோ அல்லது கற்கை நெறியிலோ ஈடுபடாது, முழுநேரமும் இக்கற்கை நெறியினை மட்டும் பின்பற்றத் தயாராயிருத்தல்.

(B) இக்கற்கைநெறிக்குரிய மொத்தக் கட்டணமாக 7500 ரூபா. இதனை மொத்தமாகவோ அல்லது பகுதியாகவோ செலுத்தத் தயாராக இருத்தல்.
(குறிப்பு:- அதிதிறமை கொண்ட மிக வறிய மாணவர்களுக்கு
ITTPO அனுமதியுடன், கடன் உதவிகளும் வழங்கப்படும்).

(C) தூர இடத்திலிருந்து வரும் மாணவர்கள் தங்குமிடக் கட்டணமாக 9 மாதங்களுக்கு 4500 ரூபா செலுத்தத் தயாராயிருத்தல் வேண்டும். (மாதாந்தம் 500 ரூபாவாகவும் செலுத்தலாம்).

(D) தெரிவுசெய்யப்படும் மாணவர் கட்டாயமாக 2 வருடங்கள் நிறுவனத்தின் கீழ் (வட-கிழக்கு), வேலை செய்யும் ஒப்பந்தத்தினை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். (கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்).

(E) நிறுவன சட்டங்களுக்கு உட்பட்டு நடத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு மாணவர்கள் தமது பதிவினை மேற்கொள்ளாதவிடத்து, காத்திருக்கும் பட்டியலில் (STAND BY STATUS) இருந்து மாணவர்கள் தேர்வுசெய்யப்பட்டு, பதிவுசெய்ய அறிவுறுத்தப்படுவர்.

இக்கற்கைநெறிக்கு முதற்பிரிவில் 60 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு, 9 மாதங்களும் ஆங்கிலத்தில் போதனைகள் நடைபெறும். இதற்காக மாணவர்களின் கற்கைநெறி தொடங்



கும்முன்பு, செறிவான ஆங்கிலப் போதனை வகுப்புக்கள் நடாத்தப்படும். இம்மாணவர்களுக்கு மாதாந்தம் பரீட்சைகள் நடைபெற்று மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். இம்மதிப்பீடுகளில், பின்னடைவான மாணவர்களுக்கு மீள் பரீட்சை நடாத்தப்படும். இவ்வாறு நடாத்தப்படும் பரீட்சைகளில் மீண்டும் மீண்டும் பின்னடைவு கண்டால், அம்மாணவர்கள் கற்கைநெறியிலிருந்து இடைநிறுத்தப்பட்டு, எந்தவித நஷ்டஈடுகளும் செலுத்தப்படாது வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படுவர்.

இந்த நிறுவனத்தின் பிரதான இலக்குகளில் ஒன்று மாணவர்களுக்குத் தொழில் வசதியைத் தேடிக்கண்டு பிடிப்பதாகும். மேலும், இந்த நிறுவனமானது சில தகுதிபெறும் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களும், கடனுதவிகளும் வழங்கவிருக்கின்றது.

இக்கற்கைநெறியானது, அமெரிக்காவிலுள்ள தொழில் வல்லுநர்கள், அறிஞர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வன்னிச் சூழலுக்கும், மாணவர் தரத்துக்கும் ஏற்றவாறு இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், இங்கு பல்லூடாக இணைய இணைப்புகளுடனான, 40 மிகப் பிந்திய P.C பிணையமாக்கப்பட்டுச் செயற்படும். இரண்டு Servers மற்றும் Test Bench ஆகியவற்றையும் இது கொண்டிருக்கும். வன்பொருள், மென்பொருள் ஆகியவற்றுக்கரன ஒரு ஆய்வு கூடமும் இங்கு உண்டு. 10 இற்குக் கிட்டிய தொழிநுட்ப வல்லுநர்கள் இங்கு கற்பித்தல் பணியில் ஈடுபடவிருக்கின்றார்கள்.

இந்த ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை முடிவடைந்து, தற்போது பதிவுகள் இடம்பெறுகின்றன. எனவே, எதிர்காலத்தினை வளம்படுத்தவும், சர்வதேச தொடர்புகளையேற்படுத்தவும் V-Tech இல் இணைந்து, உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள். ஒவ்வோர் ஏப்ரல் மாதத்திலும் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் கோரப்படும். இது பற்றிய மேலதிக விபரங்கள் நீங்கள் அறிவதற்கு,

**www. vanni .org**
**www. ittpo .org**
என்ற இணையத்தளத்தினையோ அல்லது
**vannitech@ittpo.org** என்ற மின்னஞ்சலினையோ அல்லது

**Registrar,**
**Vanni Institute of Technology,**
**Kilinochi.**
என்னும் அஞ்சல் முகவரியினையோ நாடவும்.

"எமது பாரம்பரியப் பெருமையின் ஒரு சின்னமாக Vanni Tech ஆக வேண்டும் என்பது எமது அவா. இந்தியாவின் 'IIT' போன்றோ, அன்றேல் அமெரிக்காவின் 'MIT' போனறோ V-Tech எதிர்காலத்தில் திகழவேண்டும். கலிபோர்னியோவின் 'ஸ்ரான்பேட்' பல்கலைக்கழகம் சிலிக்கன் பள்ளத்தாக்கின் வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக அமைந்தது போன்று, 'VIT' (Vanni Tech) உம் அமையும் என்பது எமது எதிர்பார்ப்பு" என்கிறார் நிறுவன அதிபர்.

## ஒரு புதிய வடிவம் 'வன்னி ரெக்'

**V-Tect** ஒரு கணினிப் பயிற்சி நிலையம் அல்ல. எவ்வாறு கணினியைப் பாவிக்கவேண்டும் என்பது பற்றியோ அல்லது **Word, Excel** போன்ற மென்பொருள் பொதிகளை எப்படிப் பாவிக்கவேண்டும் என்று போதிப்பதோ, **V-Tech** இன் திட்டமல்ல. பல்கலைக்கழகம், தொழிற்சாலைகள் மட்டத்திலான பாடங்களைப் போதிப்பதே இதன் நோக்கமாகும்.

இதன் வெற்றிபற்றி நிறுவன அதிபர் கூறுகையில் - "எத்தனை கற்கைநெறிகளைப் போதித்தோம் அல்லது எத்தனை மாணவர்கள் வெற்றிகரமாகப் படித்து முடித்தார்கள் என்பதில் **V-Tech** இன் வெற்றி தங்கியிருக்காது. கற்கைநெறியின் பின்பு மாணவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதில்தான் அது முழுக்க முழுக்கத் தங்கியிருக்கிறது" என்கிறார்.

இது நிறுவன அதிபர்களை மட்டுமல்ல, ஈழத்தமிழர் ஒவ்வொருவரது கனவும் இதுவாகும். இது நிஜமானால், சர்வதேசத்திலிருந்து மாணவர்கள் வன்னிவந்து கற்கும் நிலை வெகுதூரத்தில் இல்லை.

**சேனாதிராசா ஜெயானந்தன்**
**இடைவரவு விரிவுரையாளர் (கணினி),**
**தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## இலகுவான வழியில் ஓர் எளிய ஈப்பொறி

**என்ன** இப்பவே வெக்கைகாலம் தொடங்கிவிட்டது. இது குறைந்தது புரட்டாதி மாதம் வரைக்குமாவது தொடரும். இப்படியான சூழல், வெப்பம் அதிகமுள்ள காலங்களிலும் சரி அல்லது அதிக மழைகாலங்களிலும் சரி, வீட்டில் இந்த இலையான் எனச் செல்லமாக அழைக்கப்படும் வீட்டு ஈக்களின் தொல்லை தாங்கமுடியாதது. அதுவும் கிராமப்புறங்களில் ஆட்டு, மாட்டுப் பண்ணைகளுக்கு அருகேயுள்ள வீடுகளில் இந்த வீட்டு ஈக்களின் விருந்தோம்பல் அதிகமாக இருக்கிறது. அதேவேளை, நகர்ப்புறங்களை எடுத்தால் வைத்தியசாலை மற்றும் உணவகங்கள் போன்றவற்றுக்கு அருகிலுள்ள வீடுகளிலும் சரி, உணவகங்களின் உள்ளேயும் சரி இந்த வீட்டு ஈக்களின் தொல்லை தாங்கமுடியாது இருக்கும். சரி வருகிறது. வந்து கொஞ்சநேரம் தங்கிவிட்டுப் போகட்டுமே என்று வீட்டு ஈக்களை விடமுடியுமா? இல்லையே. பற்றீரியாக்களால் ஏற்படும் வயிற்றோட்டம், வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் மற்றும் வைரஸ்களால் ஏற்படும் ஈரலழற்சி போன்ற - உணவின்மூலமும், நீரின் மூலமும் பரவும் நோய்க்கிருமிகளைக் காவித் திரியும் இலவச வாகனமாக அல்லவா வீட்டு ஈக்கள் தொழிற்படுகின்றன. இப்போது கூறுங்கள் வீட்டு ஈக்களை வீட்டினுள் விடவேண்டுமா? விரட்டவேண்டுமா? விடலாம், விரட்ட முடியாது. ஆனால், விட்டுப்பிடித்தல் என்பது - வீட்டு ஈக்களைக் கட்டுப்படுத்த சிறந்ததோர் வழியாகும். ஆம். சாதாரண பொறிமுறை நுட்பத்தைப் பயன்படுத்தி, எமது சூழலில் தற்போது அதிகம் புழக்கத்திலுள்ள வெற்றுப் பிளாஸ்ரிக், சோடாப் போத்தல்களைக் கொண்டு ஓர் இலகுவான முறையில் ஈப்பொறியை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றிப் பார்ப்போம்.

எளியமுறை ஈப்பொறியை உருவாக்குவதற்கு இரண்டு வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்கள் (1.5 l சோடாப் போத்தல்) மற்றும் சிறிய நூல்த்துண்டு என்பவை போதுமானவை. படத்தில் காட்டியுள்ளவாறு கீழ்போத்தலின் அடிப்பாகத்தில் குறிப்பிட்ட உயரத்துக்கு, கரிய நிற மையை வெளியே பூசிவிடவும் அல்லது கடும்பச்சை நிறப்போத்தலைக் கீழ்ப்பாகத்துக்குப் பயன்படுத்தலாம். இக்கரியநிறப் போத்தலின் அடிக்கு அண்மையாக, சற்று மேலே ஈககள் நுழைவதற்கு வழியாக இரண்டு துளைகளை ஏற்படுத்துக. இனி ஈக்களை இலகுவாகக் கவரக்கூடிய உணவுப்பதார்த்தம் சிறிதளவை அடிப்போத்தலின் உள்ளே இடுக. (அல்லது ஆட்டுப்பிளுக்கை இதற்கேற்ற பொருளாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது).

அடுத்து - ஒளி உட்புகவிடக்கூடிய பிளாஸ்ரிக் துண்டொன்றை, வேறொரு போத்தலிருந்து அல்லது வேறுவகையான ஊடகத்திலிருந்து செவ்வக வடிவில் வெட்டியெடுத்து, அதனை ஓர் சுருளாக்கி கீழ்ப் போத்தலின் வாயினுள் செருகிவிடுக. அதேவேளை, அதன் மேற்பகுதியை நூல் ஒன்றுடன் இணைத்து வைத்துக்கொள்க. இனிப் போத்தலின் அடிப்பாகத்தைக் கத்தரித்து அகற்றியபின், சுருளின் நுனியில் இணைக்கப்பட்டுள்ள நூலை இதன் வழியாக வெளியே எடுத்து, மேற்போத்தலையும், கீழ்ப் போத்தலையும் படத்தில் காட்டியவாறு நன்கு இறுக்கமாகச் செருகுக. மேற்போத்தலின் மூடியை நன்கு மூடிவிடுக. இப்போது உங்கள் கைகளிலுள்ளதுதான் ஈப்பொறி. உடனடியாக உங்கள் வீட்டில் எங்கெங்கு ஈக்கள் அதிகமாக உள்ளனவோ, அங்கு கொண்டு சென்று நூலைப் பயன்படுத்திப் பொறியைத் தொங்கவிடுக.

அட, நமக்கெல்லாம் தீனிபோட்டு தொங்கவும் விடுகிறார்கள். மனிதர்கள் என நினைத்து ஈக்கள் பொறியை நாடிவரும். உணவுதேடி வந்த ஈக்கள் கீழ்ப்போத்தலின் துவாரங்களினூடாக உட்சென்று, ஒளியைத்தேடி மேல்நோக்கிச் செல்லும். ஆனால், உட்சென்றவை வெறியேற வழிதெரியாது தற்கொலை செய்துகொள்ளும். ஒரு நாளைக்கு ஓர் பொறி கொண்டு 200-300 வரையான ஈக்களைக் பிடித்தழிக்க முடியுமாம். ஒன்றென்ன ஒன்பது பொறிகளைச் செய்து, வீட்டின் மூளைக்கொன்றாய் தொங்கவிடுங்கள். ஈக்களைப் பிடியுங்கள். அது சரி, பிடிக்கப்பட்ட ஈக்களை என்ன செய்யலாம்? எனக் கேட்கிறீர்களா? இதோ அதற்கொரு ஆலோசனை, இலவசமாக வந்த ஈக்களை உங்கள் வீட்டுக் கோழிகளுக்கு அல்லது வளர்ப்புப் பறவைகளுக்கு விருந்தாக்குங்கள.




**ச.நகுலேஸ்வரன்**

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | சாவகச்சேரி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சங்கானை | மருதனார்மடம் | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 50/= | 50/= | 50/= | 70/= | 30/= | 60/= | 60/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 65/= | 75/= | 65/= | 75/= | 80/= | 70/= |
| கத்தரிக்காய் | 40/= | 15/= | 40/= | 45/= | 20/= | 30/= | 40/= |
| பாகற்காய் | 50/= | 40/= | 40/= | 60/= | 60/= | 40/= | 60/= |
| வெண்டிக்காய் | 20/= | 40/= | 20/= | 45/= | 20/= | 20/= | 40/= |
| முருங்கைக்காய் | 160/= | 140/= | 120/= | 160/= | 110/= | 140/= | 100/= |
| கரட் | 60/= | 60/= | 80/= | 70/= | 50/= | 60/= | 80/= |
| பீற்றூட் | 40/= | 40/= | 50/= | 50/= | 40/= | 30/= | 40/= |
| வெங்காயம் | 25/= | 30/= | 40/= | 30/= | 30/= | 25/= | 30/= |
| பச்சைமிளகாய் | 50/= | 60/= | 40/= | 60/= | 40/= | 40/= | 60/= |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## வேண்டும் உடனடிக் கவனம் !

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைவோரின் எண்ணிக்கை, யாழ்.மாவட்டத்தில் பெரு வீழ்ச்சி கண்டிருப்பதாகவும், தீவளவில் - 30 கல்வி மாவட்டங்களிலும் 27 ஆவது இடத்திலேயே யாழ்ப்பாணம் இடம் பிடித்திருப்பதாகவும், வட - கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் தெரிவித்திருக்கும் விடயம் - தமிழ்க் கல்வியியலாளர்களிடையே பெருத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கையின் கல்வித்துறையில் சாதனைகளும், பெருமைகளுமாக முதன்மையானதொரு இடத்திலிருந்த யாழ். மாவட்டம் - இன்று இப்படியானதொரு அவலநிலைக்கு ஆளாகியிருப்பது, தமிழ்ச்சமூகம் கண்டிருக்கின்ற மிகப்பெரும் பின்னடைவு எனக்கூறினால், அது மிகையல்ல என்றே சொல்லமுடியும்.

கடந்த பல ஆண்டுகளாகத் தொடரும் போரினால்- தமிழர் தாயகத்தின் கல்விநிலை பாரியளவில் சிதைக்கப்பட்டிருப்பது கண்கூடு.

பாடசாலைகள் அழிக்கப்பட்டும், மாணவர்கள் அகதிகளாக அனைத்தும் இழந்தவர்களாக ஆக்கப்பட்டும், கொடிய இராணுவத் தாக்குதல்களால் - மாணவர்சமூகத்தில் பச்சிளம் உயிர்கள் பல பிடுங்கியெறியப்பட்டும், யுத்தம் சூழ்ந்து நிற்க - அதனூடான உளவியல் நெருக்கடிகளாலும், உறவிழந்து - ஊரிழந்த சோகங்கள் மனதை அழுத்தியதால் உண்டான உளவடுக்களாலும், பொருளாதாரத்தடை என்னும் பெயரில் அப்பியாசக் கொப்பிகளும், பேனாக்களும்கூட தடைசெய்யப்பட்ட - உலகெங்கும் நிகழ்ந்திராத ஒடுக்குமுறையாலும் - தமிழினம் சுமந்துநின்ற அடக்குமுறைகளின் விளைவுகளே - இன்று, யாழ்.மண் கண்டிருக்கும் கல்விநிலை வீழ்ச்சிக்கு மிகப்பிரதானமான காரணியாகி நிற்கின்றன.

ஆனாலும் - ஒரு காலத்தில், யாழ்ப்பாணத்தின் மதிப்பிடமுடியாத சொத்து, அதன் கல்வியார்வமே என உலகமே பாராட்டி நின்றதும், யுத்த காலத்திலும்கூட கல்விநிலையைக் காப்பதில் - மக்களும் போராளிகளுமாக தீவிரமான கவனம் கொண்டு செயற்பட்டதும் மனக்கண்களில் நிழலாட-

இன்று - யாழ்.மாவட்டம் சந்தித்திருக்கும் பெரும் நெருக்கடிக்கு தீர்வினைக்காண எவற்றைச் செய்யவேண்டும் என்ற உடனடிக் கேள்வி பூதாகாரமாகி நிற்கின்றது.

80 களிலும், பின்னர் 90 களிலும் - யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் எறிகணை வீச்சுக்களும், விமானக் குண்டுத் தாக்குதல்களும் சரமாரிக்கு நடந்து கொண்டிருந்த போதும்,

தினம் தினம் மக்கள் சந்தித்த சொல்லொணாத் துயர வாழ்க்கைக்குள்ளும் - உயர்தரப் பரீட்சைகளில் நாட்டிலேயே முதலிடங்களைக் குவித்துவந்த யாழ்.குடாநாடு, இன்று உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவோர்கள் எண்ணிக்கையில் - இறுதிவரிசையில் வந்து சேர்ந்திருப்பது - எங்கே, பின்னடைவு ஏற்பட்டது என்பதை இனங்காண வேண்டிய அவசியத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

நீண்டகாலப் போரிற்குள்ளும் கல்வியைக் கண்ணெனப் போற்றி வந்ததற்குப் பின்னர் - கடந்த சில ஆண்டுகளாகவே யாழ்.குடாநாடு தொடர்ச்சியாகச் சந்தித்துவரும் கல்வித்தர வீழ்ச்சிக்கான காரணங்களில், இனிமேலும் போரின் நேரடிப் பாதிப்புக்களை மட்டும் கூறிவிட்டு ஒதுக்கிவிடமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதே இன்று யதார்த்தமான நிலையாகும்.

யாழ்.குடாநாட்டில், கடந்த சில வருடங்களாக இளைய சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள், செல்வாக்குகள், பிறழ்வுகள், நடத்தைக் கோலங்கள் பற்றியெல்லாம் மிக அவதானமாக, ஆழமாக ஆராய்ந்து அறிவதும் - இவற்றைச் சீரமைக்கவும், தீர்க்கவும் ஏற்ற வழிகளைக் காண வேண்டியதும் மிகவும் முக்கியத்துவப்படுத்தப்பட்ட பணியாகின்றது.

இதற்காக - யாழ்ப்பாணத்தில் இளைய சமுதாயத்திற்குள் ஊடுருவியிருக்கின்ற - கல்விநிலையை, கல்வியார்வத்தைப் பாதிக்கின்ற காரணிகள் பற்றிய ஆராய்வுகள் சம்பந்தப்பட்டோரால் துரிதகதியில் மேற்கொள்ளப்படவேண்டும்.

குறிப்பாக - யாழ்.இளைய சமுதாயம் கொண்டிருக்கக்கூடிய நடத்தைப் பிறழ்வுகள், சமூக முரண்கள் பற்றிய இன்றைய நிலைப்பாட்டிற்கும், கல்வித்தர வீழ்ச்சிக்குமான தொடர்புகள் மிக்க அவதானத்துடன் நோக்கப்படுவதும் அவசியமாகின்றது.

உயர்தரத்தில் சித்தியடையத் தவறுபவர்களின் வீதம் உயர்வதென்பது, தனியே கல்விநிலை வீழ்ச்சிக்கான குறிகாட்டியாக மட்டுமல்லாது,

இவ்வாறு சித்தியடையத் தவறுபவர்களின் - எதிர்காலம், அவர்கள் கல்விப்பாதையைத் தொடர்வதற்கான வேறு வாய்ப்புக்கள், அந்த வாய்ப்புக்கள் கிடைத்திராத பட்சத்தில் சமூகத்தின் சுமையாக மாறும் இளையோரின் தங்குநிலைத் தொடர்ச்சி, இன்னமும் இன்னலுண்டாக்கக்கூடிய - பாதை தவறும் செயற்பாடுகள், தன்னளவிலும் சமூகத்தின் மீதுமான வெறுப்பைத் தரக்கூடிய உளவியல் பாதிப்புக்கள் என, இன்னோரன்ன விடயங்களும் கவனத்திலெடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

எனவே - மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பேச்சிலிருந்தான தகவல் - எமது சமூகத்தின் கல்விநிலையில் உடனடி மீளாய்வொன்றை வலியுறுத்துகின்றது என்பது கருத்திலெடுக்கப்பட்டு, நடவடிக்கைகள் காலதாமதமின்றி முன்னெடுக்கப்படவேண்டுமென்பதே, தமிழினத்தின் கல்வி வளர்ச்சியிலும், இளையோரின் ஆரோக்கியமான முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டோரின் ஒட்டுமொத்த அபிப்பிராயமாக இருக்கமுடியும்.

# புலிகளின் புதிய படையணி ஒன்றுக்கு பிரதமர் ரணில் தலைவராகின்றார்!

## ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச கூறுகின்றார்

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியும் விடுதலைப் புலிகளை எதிர்த்து வருவது, இந்த நாட்டின் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமென, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.



நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக - நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதமொன்றில் கலந்துகொண்டு பேசும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது கூறியதாவது -

ஐ.தே.முன்னணி அரசாங்கம் - விடுதலைப் புலிகள், இந்த நாட்டில் எவரையும் கொலை செய்வதற்கு ஏற்ற ஒரு சூழ்நிலையைத்தான் உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. இந்தநிலை தொடருமாயின், புலிகள் எதனையும் செய்யும் ஒரு நிலைதான் உருவாகும்.

விடுதலைப் புலிகள், தங்கள் உட்கட்டமைப்பை விருத்தி செய்வதற்கு அரசாங்கம் ஒருமுகவராகத் தொழிற்படுகிறது. விடுதலைப் புலிகள் - தங்களுடைய பிஸ்ரல்குழு, கடற்புலிகள் என்பவற்றுக்கு மேலாகப் புதியதொரு படையணியை அமைத்திருக்கிறார்கள்.

'பச்சைப் படையணி' என்றபெயரில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் படையணிக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே தலைமை தாங்குகிறார். இவரின் முழுக்கடமையும் விடுதலைப் புலிகள் செய்கின்ற அனைத்துச் செயல்களுக்கும் நியாயம் கற்பிப்பதாகும்.

இந்தப் பச்சைப் புலிகளோடு, விடுதலைப் புலிகளின் இன்னுமொரு அணியான 'வெளிநாட்டுப் புலிகள்' என்ற அமைப்பும் பணியாற்றுகிறது. இந்த அமைப்பில், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மிக முக்கியமானது. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட்டு- கடற்படையின் போர்க்கப்பல்களைக் கூடச் சோதனையிட முயற்சிசெய்து வருகிறது. அந்தளவுக்கு போர்நிறுத்தக் கண்காணிப்பக்குழுவின் வேண்டத்தகாத தலையீடுகள் அதிகரித்து விட்டன.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, வெளிநாடுகளிலுள்ள புலனாய்வுச் சேவைகளின் முகவர்களாகத்தான் இங்கே தொழிற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இரண்டு காலுள்ள புலிகள் அனைவரும் சேர்ந்து - நாட்டிலுள்ள ஜனநாயகத்தைச் சீரழித்தே விடுவார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைபை அனுப்பமுன், அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அரசாங்கம் ஒரு பகிரங்க விவாதத்தை நடத்த வேண்டுமென்றும், விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக மங்கள சமரவீர கடிதம்!

## சுதந்திரக்கட்சிக்கு ஒத்துழைக்குமாறு கோரிக்கை

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரமுகருமான மங்கள சமரவீர - நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் - நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் பணியாற்றுபவர்கள் - நீதிக்கு மாறாகவும், முறைகேடாகவும் செயற்பட்டால், அதுபற்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சி தகவல்களைத் திரட்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஜனநாயகத்துக்கு விரோதமான நடவடிக்கைகளில் எவரும் ஈடுபட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாகவும், மங்கள சமரவீர அந்தக் கடிதத்தில் எச்சரித்துள்ளார்.

மேலும் அந்தக் கடிதத்தில் - ஐ.தே.கட்சியின் அரசாங்கத்தைப் பற்றியும் - பிரதம மந்திரி, உள்துறை அமைச்சர், பிரதம மந்திரியின் தனிப்பட்ட பாதுகாவலர்படை ஆகியவை தொடர்பாகவும் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் - வேண்டுமென்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு அநீதிகள் இழைக்கப்படுமிடத்து, அதுபற்றிப் பொலிஸ் நிலையங்களுக்கு புகார் செய்யச் சென்றாலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் போதிய மரியாதை வழங்கப்படுவதில்லையெனவும், அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



எனவே, சகல பொலிஸ் உத்தியோகத்தர்களும் - தமது நியாயமான இந்தக் கோரிக்கையை ஏற்றுச் செயற்பட வேண்டுமென, மங்கள சமரவீரவின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

பொலிஸ் திணைக்களத்தில் தவறாக நடக்கின்ற செயற்பாடுகள் பற்றி - சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தகவல் பிரிவுக்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் தகவல்களை வழங்கினால், அவை இரகசியமான முறையில் பேணப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் - மங்கள சமரவீரவின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு - புலிகள் பேச்சுக்களை நிறுத்திவிட்டு நோபல் பரிசுக்காகக் காத்திருக்கிறார்கள்!

## ஜனாதிபதியின் பேச்சாளர் கருத்துத் தெரிவிப்பு

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் தற்போது பேச்சுக்களை நிறுத்திவிட்டு, அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்குமென்று எதிர்பார்த்திருப்பதாக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பேச்சாளரான ஹரீம் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பொன்றின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக, அவர் மேலும் கருத்துக் கூறுகையில்-

விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் இன்னமும் பேச்சுவார்த்தையை ஒழுங்கு சீரான கட்டமைப்புக்குள் கொண்டுவரவில்லை. அவர்கள் - அரசியல் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் பற்றி இதுவரை பேசவில்லை. ஆனால், இவ்வாறன ஒரு நிலையில் இருந்துகொண்டு, தங்களுக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்குமென்ற எதிர்பார்ப்புநிலைக்குத் தங்களை அவர்கள் உள்ளாக்கியிருப்பதாக ஹரீம் பீரிஸ் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்குத் தங்களைத் தயார்படுத்தி வருகிறார்கள். தங்களுக்கான வரிகளை அறவிடுவதோடு - சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதையும், கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இருக்கின்ற இராணுவ மையங்களைப் புகைப்படப் பதிவுகளாக்கிக் கொள்வதிலும், இராணுவத்தினருக்கு உதவுபவர்களைக் குறைப்பதிலும் அவர்கள் நாட்டம்காட்டி வருகிறார்கள். இவையெல்லாம் இந்த அமைதிப் பேச்சுக்கள் விரைவில் நிறுத்தப்பட்டு, மீண்டுமொரு யுத்தத்தைப் புலிகள் ஆரம்பிக்கவுள்ளார்கள் என்ற அறிகுறியைத் தருவதாகத் தெரிவித்தார்.

# பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வரதரணி ஜனாதிபதிக்கு கடிதம்!

(கொழும்பு)

தமது அமைபபின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட நடவடிக்கைகளை, விடுதலைப் புலிகள் தடுத்துவருவதாகவும், தங்களது பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்தவேண்டும் எனவும் கோரி, ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வரதர் அணியின் அமைப்பாளரான ஆர்.துரைரட்ணம், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக்கடிதத்தில் துரைரட்ணம் மேலும் தெரிவிக்கையில்- விடுதலைப் புலிகளின் பல அணிகள் தற்போது மட்டு - அம்பாறை மாவட்டங்களிலுள்ள அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்திருக்கின்றனர். இவர்கள், அங்கு அரசியல் பணிகளில் ஈடுபடுவதாகக் கூறிக்கொண்டு, எமது அமைப்பைச் சேர்ந்தவர்களைத் தாக்கிவருகின்றனர்.

எனவே - இவ்வாறான நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு, ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்தக் கடிதத்தில் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம்!

நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த கல்விசாரா ஊழியர்களின் அடையாள வேலைநிறுத்தமொன்று, எதிர்வரும் 17 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

சம்பளப் பிரச்சினைகள், பதவியுயர்வுகள் உட்படப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக - பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்களின் இணையத் தலைவர் லயனல் மல்வத்த கொழும்பில் தெரிவித்திருக்கிறார்.

# ஒரு நூல் வெளியீடும்

ஒரு நூல் வெளியீட்டு விழாவுக்குப் போவதென்றால், என் மனம் திக்குத்திக்கு என்று அடிக்கும். கூட்டம் வருமா? நூல் விற்பனையாகுமா? நூலாசிரியர் போட்ட முதலைத் திருப்பி எடுப்பாரா? இப்படி ஆயிரம் கேள்விகள் மனதில் கூத்தாடும்.

அண்மையில் 'மகப்பேறும் மகளிர் மருத்துவமும்' என்ற நூல் வெளியீட்டு விழாவிற்குப் போன போது, என் மனதுக்குள்ளே இதே உணர்வலைகள்தான். ஒவ்வொரு கதாசிரியனும், கவிஞனும், கட்டுரையாளனும் தனது படைப்புக்கள் - நூல்வடிவில் வரவேண்டும் என்று ஆசைப்படுகிறான். இது ஒரு நியாயமான ஆசை. சிக்கல் என்னவென்றால், எழுதினவனே அந்த நூலைத் தனது பொருட்செலவில் புத்தகமாக்க வேண்டும். தனது செலவில் வெளியீட்டு விழாவை நடத்தவேண்டும். வெளியீட்டு விழாவில் புத்தகங்கள் விற்பனையானால்சரி, இல்லாவிட்டால் முதலுக்கே மோசம் வந்துவிடும்.

பொதுவாக, தமிழ்மக்களுக்குப் புத்தகம் படிக்கும் பழக்கம் மிகக் குறைவு. அதைவிடக் குறைவு காசு கொடுத்துப் புத்தகங்களை வாங்கிப் படிப்பது. நகைக்கடை, சேலைக் கடை இவற்றுக்குப் போனால் கூட்டம் ஓகோ என்றிருக்கும். கடை திறக்கும் முன்னரே வாங்குவோர் வரிசையில் கால்கடுக்க நிற்பார்கள். புத்தகக் கடைக்குப் போனால், அது வெறிச்சோடிப் போய்க்கிடக்கும். ஆகமிஞ்சினால் இரண்டொரு தலைக் கறுப்பைக் காணலாம். ஆனபடியால் தான், ரொரான்ரோவில் நூற்றுக் கணக்கான புடவைக் கடைகள், நகைக் கடைகள கொடிகட்டிப் பறப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மறுபுறமாக இரண்டு அல்லது மூன்று புத்தகக் கடைகள் பாயாசத்துக்கு முந்திரி போட்டமாதிரி இருக்கின்றன.

நான் அங்காடி உரிமையாளர்களைக் குறைசொல்வதாக யாரும் எண்ணிவிடக்கூடாது. ஒரு முதலாளித்துவ பொருளியல் அமைப்பில் மக்கள் எதை எதை விரும்புகிறார்களோ அவையே சந்தைக்கு வருகின்றன. அவற்றையே கடைக்காரர்கள் விற்பனைக்கு வைப்பார்கள்.

ஒரு திருமண வீடா? கோயில் தேர் அல்லது தீர்த்தத் திருவிழாவா? பெண்கள் பல நூறு டொலர்கள் செலவழித்து வாங்கிய நகைகளைக் கழுத்து, கை நிறையப் போட்டுக் கொண்டு, காஞ்சிப்பட்டுடுத்து, முகம் முழுதும் பவுடரை அப்பிக்கொண்டு, கொண்டைக்குப் பூக்களை வைத்துக் கொண்டு, ஒரு நடமாடும் சேலை - நகைக் கடைமாதிரி அலங்காரமாகப் போகிறார்கள்.

இந்த அலங்கரிப்பில் ஆண்கள் மட்டும் பாவங்கள். ஒரு காற்சட்டை, ஒரு கோட், ஒரு சேட் அல்லது பட்டுவேட்டி, சால்வை. மேற்கொண்டு மிஞ்சினால் கழுத்துக்குத் தங்கச் சங்கிலி அவ்வளவுதான். தமிழர்களுடைய வீடுக்ளில் கண்டிப்பாக சாமி அறை இருக்கும். சாமி அறை இல்லாத வீட்டையே பார்க்கமுடியாது. ஆனால், யார் வீட்டிலும் புத்தக அறை இருக்காது. புத்தகம் வாங்கினால் அல்லவா புத்தக அறை வேண்டும்?

ஆங்கிலேயர்கள் அப்படி இல்லை. நிறைய வாசிக்கிறார்கள். நிறைய நூல்களைக் காசு கொடுத்து வாங்குகிறார்கள். உணவுக்கு, உடைக்குச் செலவழிப்பதுபோல உழைப்பில் ஒரு பகுதியைப் புத்தகம் வாங்குவதில் செலவிடுகிறார்கள்.

ஆங்கிலத்தில் ஒரு நல்ல நூல் எழுதினால் போதும். அடுத்த நாளே அதை எழுதிய நூலாசிரியர் கோடீசுவராக மாறிவிட வாய்ப்பு இருக்கிறது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனின் மனைவி கிலாரி கிளின்டன் 'வாழும் வரலாறு' (Living History) என்ற பெயரில் 562 பக்கங்கள் கொண்ட ஒரு நூலை எழுதி வெளியிட்டுள்ளார். நூலுக்குப் பிள்ளையார் சுழி போடுமுன்னரே, முற்பணமாக 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை அவர் வாங்கிவிட்டார். நூல் வெளிவந்த பின் 3 மில்லியன். ஆக மொத்தம் 8 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் சம்பாதித்துவிட்டார்.

இவரைத் தூக்கி அப்படியே சாப்பிட்டுவிட்டார் இன்னொரு பெண் எழுத்தாளர். பெயர் **Ms. J.K.Rowling.** இவர் **'Harry Potter'** என்ற தலைப்பில் புத்தகங்களை எழுதிவருகிறார். இது சிறுவர்களுக்கான மாயாஜால மந்திரதந்திரப் புத்தகம்.



முதல் நான்கு புத்தகங்கள் ஏற்கனவே வெளியாகிவிட்டன. இந்தப் புத்தகங்கள் நான்கும் 200 நாடுகளில் - 200 மில்லியன் படிகள் (20 கோடி) விற்பனையாகின. அதன் பதிப்பாளர் **Bloomsbury** இற்குக் கிடைத்த இலாபம் 15 மில்லியன் ஸ்டேலிங் பவுண்கள். ஐந்தாவது **"Harry Potter and the Order of the Phoenix"** என்ற புத்தகம்.

சரியாக சனிக்கிழமை இரவு 12.01

# சில பல ஆதங்கங்களும்!

மணிக்கு உலகம் பூராவுமுள்ள புத்தகக் கடைகள் கதவுகளைத் திறந்து விற்பனைக்கு விட்டன. எக்கச்சக்கமான விளம்பரம்.

முதல்நாள் அமெரிக்க அமேசன் வலயத்தில் மட்டும் 760,000 படிகள் விற்பனையாகின. விலை 29.99 அமெரிக்க டொலர்கள். மற்றைய நாடுகளிலுள்ள கிளைகள் மூலம் 10 இலட்சம் படிகள் விற்பனையாகின.

இன்று இந்த நூலாசிரியர் உலகத்திலுள்ள முதல் நூறு பணக்காரர்களில் ஒருவராகக் கணிக்கப்படுகிறார். அவரது சொத்தின் பெறுமதி பிரித்தானிய மகாராணி எலிசபெத்தைவிட அதிகமாம்.

தமிழில் ஒரு புத்தகம் வெளியிட்டால் ஆயிரம் படிகள் விற்பனையாவது அதிகம்.

இதற்கு இந்திய ஜனாதிபதி ஏ.பி.ஜே.அப்துல் கலாம் எழுதிய "அக்கினிச் சிறகுகள்" (தன்வரலாறு) விதிவிலக்கு. ஒரு இலட்சம் படிகள் விற்பனையாகி, தமிழ்ப் புத்தக வெளியீட்டில் 'சாதனை' படைத்துள்ளது.

கலைஞர் மு.கருணாநிதி எழுதிய 'தொல்காப்பியப் பூங்கா' 10,000 படிகள் விற்பனையாகி உள்ளது. இதற்கு முக்கிய காரணம் - இந்த இருவரும் 'பிரபலங்கள்' என்பது தான். ஒருவர் இன்னாள் ஜனாதிபதி. மற்றவர் முன்னாள் முதல்வர். நூல்

**கனடாவிலிருந்து – நக்கீரன்**

வெளியீட்டு விழா மாலை 6.00 மணி என்று அழைப்பிதழில் போட்டிருந்தார்கள். ஆறு மணிக்கு 5 மணித்துளிகள் (**Minutes**) இருக்க 'டாண்' என்று ஸ்காபரோ குடிமக்கள் (**Civic**) மைய சபைக்குள் நுழைந்தேன். நான் எதிர்பார்த்தது சரிதான். விழாத் தலைவர், நூலாசிரியர், நூல் ஆய்வாளர்கள் இப்படிக் கொஞ்சப்பேர் மூலைக்குமூலை நின்றுகொண்டிருந்தார்கள். முன்வரிசை இருக்கைகள் வெறிச்சோடிக் கிடந்தன. ஆறேகால் மணிக்கு நிகழ்ச்சி தொடங்கும் என்று அறிவித்தார்கள். ஆறேகால் மணிக்குப் பிறகும் பத்துப் பன்னிரண்டு பேர்கள்தான் உட்கார்ந்திருந்தார்கள்.

இது விழா ஏற்பரட்டாளர்களுக்குப் பெரிய சங்கடத்தைக் கொடுத்த போதிலும், மெல்ல ஒலிவாங்கிக்கு வந்த தமிழ்க் கலை தொழிநுட்பக் கல்லூரிப் பொறுப்பாளர் இராசரத்தினம், அவையோரைப் பார்த்து வெளியில் சிற்றுண்டி, தேநீர், கோப்பி இருக்கிறது. அங்கு போய்ச் சாப்பிட்டுவிட்டு வாருங்கள். ஆனால், அவற்றை அவைக்குள்ளே தயவு செய்து கொண்டுவந்துவிடாதீர்கள் என்று கேட்டுகொண்டார். நேரம் இப்போது மாலை 6.30. அப்போதும் கூட்டத்தைக் காணவில்லை. மேலும் காத்திராமல் ஆறேமுக்கால் மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமானது. சு.இராசரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழில் அறிவியல் நூல்கள் வெளிவருவது மிகஅருமை. வெளிநாட்டில் முப்பத்தொரு ஆண்டுகள் செலவழித்த ஒருவர், மருத்து சம்பந்தமான நூலைத் தமிழில் எழுதியிருப்பது பாராட்டத்தக்கது, போற்றத்தக்கது என்றார். நேரம் 7 மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. சொல்லி வைத்தாற்போல் மக்கள் இப்போது அவைக்குள் ஒருவர் பின் ஒருவராக வரத்தொடங்கினார்கள். விழா ஆறு மணிக்கு என்று போட்டால் - விழா 6 மணிக்குத் தொடங்குவதில்லை.

இந்தச் சூட்சுமம் எங்களுடைய ஆட்களுக்கு நன்கு தெரியும். எனவே தான், ஒரு மணித்தியாலம் கழித்து வருகிறார்கள். வரவேற்புரையை அடுத்து, கலாநிதி இராஜேஸ்வரி நூல் ஆய்வுரையை நிகழ்த்தினார். இவர், மகப்பேற்றியல் மகளிர் மருத்துவச் சிறப்புச் சிகிச்சை மருத்துவர்.

நூலாசிரியர் வைத்திய கலாநிதி செ.ஆனைமுகன் எழுதிய 'மகப்பேறும் மகளிர் மருத்துவமும்' என்ற நூல் - ஆங்கிலத்தில் புலமை இல்லாதவர்களுக்கு மகப்பேறு தொடர்பான பல அரிய தகவல்களைத் தருகிறது. அதனைப் படித்து தாய்மார்கள் பயனடையலாம் என்றார். பேச்சை எழுதி வாசித்தாலும், அதனைத் தங்கு தடையின்றி செய்து, குறித்த நேரத்துக்குள் முடித்துக் கொண்டார்.

தொடர்ந்து பேசிய நூலாசிரியர் வைத்திய கலாநிதி ஆனைமுகன், 'இந்த நூலின் விற்பனையால் வரும் வருவாய் - தமிழர் வாழ்க்கை, கலாசாரம், தமிழ்மொழி முன்னேற்றம் ஆகியவற்றுடன் தொடர்புள்ள அமைப்புகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும்' எனப் பலத்த கைதட்டலுக்கு மத்தியில் அறிவித்தார். ☆


# பணிநிலை வேண்டுகை

**ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள், தங்களது சுயவிபரமடங்கிய வேண்டுகைகளை 2003.07.20 ஆம் நாளிற்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.**

பணிநிலை :- 01) ஆய உதவியாளர் (ஆண்கள்)
02) ஆய அலுவலர் (ஆண்கள்)

கல்வித் தகைமை:

பணிநிலை 01 : க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்

பணிநிலை 02 : க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

# நடுவப்பணியகம்,
# ஆயப்பகுதி, கிளிநொச்சி.

(சி-1212)

# பங்களாதேஷில் படகு விபத்து; 400 பயணிகள் மரணமாகினர்!



தென்கிழக்கு பங்களாதேஷில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற பயணிகள் படகுவிபத்தில், 400 பேர் காணாமற்போயுள்ளனர். இவர்கள் அனைவரும் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. விபத்து நடைபெற்றபோது 750 பேர் படகிலிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'எம்.வி.நஸ்ரீன்' என அழைக்கப்படும் மூன்று தட்டுடைய இப்பயணிகள் படகு, தலைநகர் டாக்காவிலிருந்து லால்மோகன் எனும் பகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, நேற்றுமுன்தினம் நள்ளிரவு, சந்தபூர் பகுதி அருகே கடல் கொந்தளிப்பில் சிக்கி மூழ்கியது.

429 பேர் பயணம் செய்யும் படகில், அளவுக்கதிகமான பயணிகள் மட்டுமல்ல - அரிசிமூடைகள், மரக்கறிகள் என்பனவும் அதிகளவில் ஏற்றப்பட்டிருந்தமையே, படகு கவிழ்ந்தமைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

பயணிகளில் 200 பேர் நீந்திக் கரைசேர்ந்துள்ளனர். படகு மூழ்கிய பகுதியில் - பத்மா, மெக்ஹனா, தகாக்கியா ஆகிய மூன்று ஆறுகள் சந்திப்பது குறிப்பிடத்தக்கது.

தேடுதல் பணி நடைபெற்று வருகின்றபோதும், பருவகால மழை இப்பணிக்குப் பெரும் தடையாகக் காணப்படுகிறது. 1994 இலும் இதே பகுதியில் ஒரு படகு மூழ்கியதும், அப்படகு இதுவரை மீட்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க உளவு அமைப்பு செயற்பாடு; விசாரிக்க ஜனநாயகக் கட்சி கோரிக்கை!

## பொய்க் காரணம் கூறியே ஈராக்மீது படையெடுப்பாம்

அமெரிக்கா, தனது உளவுச் சேவையை எப்படிக் கையாள்கிறது என்பது குறித்து, முழுவிசாரணை நடத்தப்படவேண்டுமென, அந்நாட்டு எதிர்க்கட்சியான ஜனநாயகக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. ஈராக் பேரழிவு ஆயுதங்கள் தொடர்பான தனது அறிவுறுத்தல்கள் தவறாகிவிட்டதென, வெள்ளைமாளிகை ஒத்துக்கொண்டுள்ளதையடுத்தே, இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈராக், ஆபிரிக்க நாடான நைகரிலிருந்து யுரேனியத்தை வாங்கியதாக, அமெரிக்க உளவு நிறுவனம் சமர்ப்பித்த ஆவணம் போலியானது என, கடந்த செவ்வாயன்று வெள்ளைமாளிகை விடுத்த அறிவிப்பில் ஒப்புக்கொண்டிருந்தது.

இதைத் தொடர்ந்து - ஈராக் மீதான பொய்க்குற்றச்சாட்டை சுமத்தி, போரை அமெரிக்கா ஆரம்பித்ததாக பல தரப்பிலிருந்தும் குற்றச்சாட்டுக்கள் கிளம்பிவருகின்றன.

பிரிட்டனின் உளவு நிறுவனம் வழங்கிய தகவலின்பேரில், நைகரிடமிருந்து ஈராக் யுரேனியத்தைப் பெற்றதாக, அமெரிக்க உளவு நிறுவனம் அறிக்கை தயாரித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொய்க் காரணம் கூறி ஈராக் மீது படையெடுத்ததாக, நாடாளுமன்றில் - பிரிட்டிஷ் எதிர்க்கட்சி எம்.பிக்களின் கடும் கண்டனத்திற்கு, பிரிட்டிஷ் பிரதமர் பிளேயரும் தற்போது உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பதவியை துறக்கத் தயார் பிரதமர் அபாஸ் அறிவிப்பு!

## பலஸ்தீன தலைமையில் பிளவு வலுக்கிறது

பலஸ்தீன தலைமையுடன் முரண்பாடுகள் அதிகரிப்பதால், தாம் பதவியைவிட்டு விலகவுள்ளதாக - பலஸ்தீனத்தின் புதிய பிரதமர் மஹ்மூட் அபாஸ் எச்சரித்துள்ளார். கடந்த திங்களன்று - ரம்லா நகரில் நடைபெற்ற பட்டா அமைப்பின் மத்திய குழுக் கூட்டத்தில், காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்தே, பிரதமரின் இந்தப் பதவிவிலகல் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பிரதமர் அபாஸ் - அளவுக்கதிகமாக இஸ்ரேலை நம்பிச் செயற்படுவதாக, பலஸ்தீன அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர். ஆறாயிரம் பலஸ்தீனக் கைதிகள் இஸ்ரேல் வசம் இருந்தபோதும், ஆயிரம் கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் முன்வந்ததை, அபாஸ் வரவேற்றமைக்கும் அவர்மீது கடும் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து - பிரதமர் அபாஸ், ஜனாதிபதி அரபாத்துக்கு எழுதிய கடிதத்தில் இரண்டு கோரிக்கைகளை விடுத்திருந்தார்.

முதலாவது - இஸ்ரேலுடன் எப்படித் தாம் செயற்படவேண்டும் என, பட்டா அமைப்பு எனக்கு அறிவுறுத்த வேண்டும்.

இரண்டாவது - இந்த யோசனைகள ஏற்கமுடியாததாக இருந்தால் தாம் பதவி துறக்க அனுமதிக்க வேண்டும் என கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், இது குறித்து அரபாத்தின் அறிவிப்பு ஏதும் வெளியாகவில்லை.





சத்திரசிகிச்சையின் பின்னர் உயிரிழந்த ஈரானிய இரட்டைச் சகோதரிகளான லேடன், லேலே ஆகியோரது சடலங்களுக்கு, தோழி ஒருவர் அஞ்சலி செலுத்துவதை முதலாவது படத்திலும், சடலங்கள் - ஈரானுக்கு அனுப்புவதற்காக எடுத்துச் செல்லப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.


நிறஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ், ரம்பா, மணிவண்ணன் கபாலி நடித்த
மிலிரறி
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)
THE BOUN IDENTITY
(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.
11 வரை
விக்கிரம், ஜோதிகா, விவேக்
தூள்
தினசரி 10.30, 2.30, 6.30.9.30
12 முதல் - மாதவன், ஜோதிகா
பிரியமானதோழி
(சி-1137)

நிலா இசை
நெஞ்சோடு பேசும்
அங்கவீனமடைந்த மாணவர்களின் வளர்ச்சி நிதிக்காக ஒரே இரவில் இரு மாபெரும் இசை நிகழ்ச்சிகள்.
INKARAN MUSICAL GROUP
நம் தேசக் கலைஞர்கள் பங்குபற்றும்
ஐங்கரன் இசைக்குழு
மினி மகாலிங்கம் அவர்களின் நெறிப்படுத்தலில் நம் தேசக் கலைஞர்கள் வழங்கும் நவீன ஒலி, ஒளி தொழில்நுட்பத்துடனான இசை இரவு.
SITHARA MUSICAL GROUP
பிரபல முன்னணிக் கலைஞர்கள் ஒன்றிணைந்து வழங்கும்
சித்தாரா இசைக்குழு
நவீன மேடை அமைப்பு மற்றும் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஒளி அமைப்புக் காட்சிகளும், சிலிர்க்க வைக்கும் இசை அமைப் புடன் கூடிய பிரபல சித்தாரா இசைக் குழுவினரின் இசை இரவு.
இடம்: யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானம்.
காலம்: 11.07.2003 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி
அனைவரும் திரண்டுவந்து அன்புடன் ஆதரவு தருவீர்!
யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி சமூகத்தினர்.
ஊடக அனுசரணை: நமது ஈழநாடு

HATTON NATIONAL BANK HNB LIMITED
ஹற்றன் நஷனல் வங்கியின்
வாடிக்கையாளர் நிலையமொன்று
எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி (நாளை)
காலை 10.30 மணியில் வரும் சுபவேளையில்
இல. 110, கே.கே.எஸ். வீதி, சுன்னாகத்தில்
திறந்து வைக்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(சி-1224)

குட்டி மேதைகள்
தொலைக்காட்சித் தொடர் நிகழ்ச்சி விண்ணப்பம்
முழுப்பெயர் :..............................
..............................
பால் :ஆண் [ ] பெண் [ ]
பிறந்த திகதி :..............................
முகவரி :..............................
..............................
பாடசாலையின் பெயர்:..............................
ஆர்வமுள்ள துறைகள்:..............................
..............................
..............................
..............................
கையொப்பம்
குறிப்பு: நமது ஈழநாடு சிறுவர் அரங்க இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள் நேடியாக இந்த நிகழ்ச்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். எனவே, கழக அங்கத்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.
விண்ணப்ப முடிவு திகதி : 2003.07.09
அனுப்ப வேண்டிய முகவரி: Digital Network, 231, கோவில் வீதி, நல்லூர்.
ஊடக அனுசரணை: நமது ஈழநாடு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



நோர்வே விசேட தூதுவர் வெஸ்பேர்க் நேற்றுமுன்தினம் வன்னியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியபோது எடுக்கப்பட்ட படம்.

**மின்வேலியில் மாணவன் சிக்கியமை தொடர்பாக**

# கடற்படையினர் - பொதுமக்கள் வேலணையில் பெரும் சர்ச்சை!

## சம்பவம் பற்றி மாணவர் பேரவை ரணிலுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வேலணை - துறையூரில் நேற்று முன்தினம் கடற்படையினரின் கம்பி வேலியில் பாய்ச்சப்பட்ட மின்சாரத்தினால் மாணவன் ஒருவன் தாக்குண்ட சம்பவம் தொடர்பாக, நேற்று அப்பகுதி மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. துறையூரிலிருக்கும் கடற்படைமுகாமை உடனடியாக அகற்றுமாறும், இல்லையேல், முகாமைத் தாம் பலவந்தமாக அகற்றுவோம் எனவும் இந்த மக்கள் எச்சரித்தனர்.

நிலைமை மோசமடைந்ததைத் தொடர்ந்து - இப்பகுதிக்கு கண்காணிப்புக்குழுவினர் வரவழைக்கப்பட்டனர். கண்காணிப்புக்குழு இரு தரப்பினருடனும் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து, நாளைக்குள் இது தொடர்பாக தமது முடிவை அறிவிப்பதாக கடற்படையினர் உறுதியளித்தனர்.

இதேவேளை - மாணவன் படையினரின் வேலியில் தாக்குண்ட சம்பவம் தொடர்பான தமது கண்டனத்தை, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் மூலமாக அனுப்பி வைத்துள்ளது.

இந்தக்கடிதத்தில், கடற்படையின் மனிதாபிமானமற்ற செயற்பாடு சுட்டிக்காட்டப்பட்டதுடன், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை வருடங்களாகியும் யாழ்ப்பாணத்தில் இயல்புநிலை ஏற்படுத்தப்படவில்லை என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதேபோன்று யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து இராணுவ முகாம்களிலும் மின்சாரவேலிகள் அமைக்கப்பட்டிருப்பது பற்றி, தமிழீழ மாணவர் பேரவையினரால் பிரதமர் ரணிலுக்கு எடுத்துக் கூறப்பட்டிருப்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் - தமிழ் மக்களின் தாயகத்தில், அம்மக்களது விருப்பத்திற்கு மாறாக படைகள் தங்கியிருப்பதாலேயே ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோப்ப நாய்களின் உதவியுடன் நாடாளுமன்றில் கடும் சோதனை!

நாடாளுமன்ற கட்டடத் தொகுதிக்கு, நேற்றுமுன்தினம் பெருமெடுப்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா விடுத்த உத்தரவையடுத்தே, இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு, பெருமளவிலான மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டு, ஒவ்வொரு அறையும் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டது. விசேடமாக, நாடாளுமன்றக் கட்டடத்திலுள்ள பிரதமரின் அலுவலகம், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் ஆகியவையே சோதனையிடப்பட்டன.

அதேவேளை - ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தனியாக வைக்கப்பட்டிருந்த பெட்டகங்களும் - மோப்பநாய்கள் மூலம் சோதனையிடப்பட்டன.

நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்துமாறும், இதன்போது மோப்ப நாய்கள் பயன்படுத்த வேண்டும் என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரும் சபையின் தலைவருமான டபிள்யூ. ஜே.என் லொக்குபண்டார, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

## புலிகள் தளபதிகள் - படையதிகாரிகள்...

சேர்ந்த பவானந்தன் ஆகியோரும், இராணுவத் தரப்பில், திருகோணமலை மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் செனவீர மற்றும் பிரிகேடியர் சகீர் ஆகியோரும் பங்குகொண்டனர்.

திருமலை மாவட்டத்திலுள்ள குரங்குப்பாஞ்சான் எனும் பகுதியில், விடுதலைப் புலிகளின் முகாம் அமைப்பதில் எழுந்த சர்ச்சை தொடர்பாகவும், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விடுதலைப் புலிகள் மற்றும் அரச படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை வரையறுப்பது தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.

குரங்குப்பாஞ்சானில் புலிகளின் முகாம் நீண்ட காலமாக அவ்விடத்தில் இருந்துவரும் வேளையில், திடீரென வந்து - அந்த முகாம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிலப்பகுதியில் இல்லை என்றும், அதனை அகற்றுமாறும் கோருவது யதார்த்தத்திற்குப் புறம்பானது என்றும், பதுமன தெளிவுபடுத்தினார்.

சந்திப்பின் இறுதியில், குறிப்பிட்ட அந்த முகாம் தொடர்ந்தும் அந்த இடத்திலேயே இருக்கும் என்றும், இன்றிலிருந்து ஐந்து தினங்களுக்குள் குறிப்பிட்ட பகுதிக்குச் செல்லும் மாவட்டக் கண்காணிப்புக் குழு, போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாளிலிருந்த புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை சரியாக ஆராய்ந்து வரையறுக்கும் என்றும், அதன்பின்னர்தான் அந்த முகாமை இடம்மாற்றுவதா, இல்லையா என்ற முடிவு எடுக்கப்படும் என்றும் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி உள்நுழைந்தமையால், புலிகளின் தடுப்புக்காவல் வைக்கப்பட்டிருந்த கடற்படைச் சிப்பாயை விடுவிக்குமாறு படைத்தரப்பிலிருந்து கேட்கப்பட்டபோது, ஏற்கனவே திருமலைக் கடலில் கைதுசெய்யப்பட்டு- தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள போராளியை விடுவித்தால் மாத்திரமே, குறிப்பிட்ட கடற்படைச் சிப்பாயை விடுவிக்கமுடியும் என பதுமன் தெரிவித்திருந்தார்.

தமது போராளிகள் தொடந்தும் கைதுசெய்யப்பட்டு, அரசின் சட்டநடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நிலை யில், போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் வகையில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்நுழைந்த கடற்படைச் சிப்பாயை விடுவிப்பது சாத்தியமற்றது எனவும், பதுமன் மேலும் குறிப்பிட்டார்.

## இம்மாத...

மீண்டும் ஆரம்பமாவதற்குரிய அறிகுறிகள் தெளிவாகத் தெரிவதாகவும், அநேகமாகப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கை தங்களுக்கு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை - கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகப் பேச்சாளரான இதேக்கி மட்சுவி கருத்து வெளியிடுகையில், ஜப்பானில் நடைபெற்ற மாநாட்டில் அளிக்கப்பட்ட நிதியுதவி, நிபந்தனைகளின் அடிப்படையிலானது என்றும், அமைதி முயற்சிகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே, இந்த நிதியுதவி சரியான முறையில் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

## சங்கரியின் தலைமை...

வில்லை.

மேற்படி செயற்குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர், இந்தியத் தரப்பு மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகள் காரணமாகவே, இறுதி நேரத்தில் ஆனந்தசங்கரியின் தலைமைப்பதவி தப்பிப்பிழைத்து.

இதற்காக இந்தியத் தரப்பு பல்வேறு வகையான இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகித்தது.

கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு இந்தியத் தரப்பிலிருந்து எச்சரிக்கைத்தொனி கலந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

ஒரு சில உறுப்பினர்களுக்கு தொலைபேசி ஊடாகவும் அறிவுரை என்ற வடிவில் எச்சரிக்கை வழங்கப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து, ஆனந்தசங்கரியை அகற்றும் முயற்சிகளையும் கைவிட்டு, மிக முக்கிய கூட்டணிப்பிரமுகர்கள் அமைதியடைந்துவிட்டனர். ஆனந்தசங்கரியின் தலைமைப் பதவியும் இதனால் தப்பிப் பிழைத்தது.

அதேவேளை - மேற்படி விடயம் தொடர்பான செய்தியைப் பிரசுரித்தமைக்காக, கொழும்பிலுள்ள தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கும், அதன் பத்திரிகையாளர் ஒருவருக்கும் - இந்தியத்தரப்பிலிருந்து தொலைபேசி அழைப்புக்கள் கிடைத்திருப்பதாகவும் தெரியவருகிறது. (01)

## பாதுகாப்பு...

யினர் செல்ல முயற்சித்தபோதிலும், அதற்கும் புலிகள் அனுமதிக்கவிலலை. புலிகளின் உத்தரவிற்காக படையினரை அங்குமிங்குமாக எம்மால் நகர்த்திவிட முடியாது என அந்த அதிகாரி தெரிவித்தார்.

## பாதுகாப்பு வலய...

கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனியாக இராணுவ நலன்களை மட்டும் கருத்தில் கொள்ளக்கூடாது. மக்களின் நலன்களிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். பொதுவான கண்ணோட்டத்துடனும், நடுநிலை நோக்குடனும் இப்பிரச்சினையை அணுகவேண்டும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

மக்களின் இயல்புவாழ்க்கையைப் பாதிக்காத வகையிலும், சமாதான முயற்சியை வலுப்பெறச் செய்யும் வகையிலும் அரசு - இந்த உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையை அணுகவேண்டும் என்றும், அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

பேகர் பவுண்டேசன் ஏற்பாடு செய்திருந்த மேற்படி ஆய்வுப்பட்டறையில் -

யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, அருட் தந்தை பேணாட், மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் றுவான் சந்திரசேகர, மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன், முன்னாள் யாழ்.மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.


## அலுவலகச் செய்தியாளர்

அலுவலகச் செய்தியாளர்களாக பணியாற்றக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் தமது அனுபவச் சான்றிதழ்களுடன் அலுவலகத்துக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

நிர்வாக இயக்குநர்
'நமது ஈழநாடு'


# சமாதானப் பேச்சுக்கள் குறித்த புலிகள் அறிவிப்பு கிட்டவில்லை

## நோர்வே வெளியறவு அதிகாரி அறிவிப்பு

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக, புலிகளிடமிருந்து எந்த அறிவித்தல்களும் கிடைக்கவில்லை என, நோர்வே வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் ஒஸ்லோவில் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் தொடங்கப்படுவது தொடர்பாக, புலிகள் அறிவித்திருப்பதாக ஒஸ்லோவில் வெளியான செய்தி தொடர்பாக, கருத்துக் கூறும்போதே அந்த அதிகாரி இப்படிக் கூறினார்.

# கண்ணிவெடி அகற்றும் மகளிர்; மற்றுமோர் அணி வெளிவந்தது!

(கிளிநொச்சி)

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் பயிற்சி பெற்ற மற்றுமொரு அணியினர், இன்று தமது பயிற்சியை முடித்து வெளியேறுகின்றனர்.

கண்ணிவெடி அகற்றுவதில் விசேட பயிற்சிபெற்ற பெண்கள் பிரிவினரே, இன்று தமது பயிற்சியை நிறைவுசெய்து கொள்கின்றனர்.

இன்று பிற்பகல் 4 மணியளவில் இந்தப் பிரிவினருக்குச் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் பரந்தனில் நடைபெறவுள்ளது.

# எதிர்கால பேச்சுக்களில் இணைந்த முஸ்லிம் குழு

## முஸ்லிம் எம்.பிக்கள் கூட்டத்தில் தீர்மானம்

பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்பட்டால், எதிர்காலத்தில் இடம்பெறும் பேச்சுக்களில் - முஸ்லிம் மக்கள் சார்பில், 'ஒன்றிணைந்த முஸ்லிம் குழு' பங்குபற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலான விசேட கூட்டமொன்று, நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றபோதே, மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தரப்பினர் பங்குபற்றுவதனை - விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் விரும்புவதால், முஸ்லிம் தரப்பினர் பேச்சுக்களில் பங்குபற்ற வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதுடன் - இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம் மக்களின் நிலைப்பாடு தொடர்பாகவும், ஒன்றிணைந்த முஸ்லிம் குழுவினர் ஆராயவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த ஒன்றிணைந்த முஸ்லிம் குழுவிற்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியே தலைமை தாங்கவுள்ளதாகவும் தெரியவருகிறது.(01)

# கிளிநொச்சி வைத்தியசாலை மீண்டும் பழைய இடத்தில்!

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை மீண்டும் பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்தது.

இராணுவ நடவடிக்கை காரணமாக அக்கராயனுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட இந்த வைத்தியசாலை, நேற்று முதல் மீண்டும் கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது. வைபவரீதியாக இந்த வைத்தியசாலை நேற்று திறந்துவைக்கப்பட்டது.

## பஸ்ஸைப்...

இரவு 8.30 மணியளவில் கூட்டத்தை நிறைவு செய்ததால், நிகழ்ச்சி நிரலில் இருந்த ஆனந்தசங்கரியின் தலைமை குறித்து ஆராயவிருந்த விடயம் செயற்குழுவில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. கிழக்குப் பகுதி உறுப்பினர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல பஸ்ஸை பிடிக்க வேண்டியிருந்ததால், முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வது இறுதி நேரத்தில் கைவிடப்பட்டதாகக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - நிகழ்ச்சி நிரலில் உள்ள மீதியான விடயங்கள், அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் சேர்க்கப்படும் என, கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

## மகனை....

பாய் ஒன்றில் சுற்றி வீட்டின் பின்புறத்தில் வைத்திருந்தவேளை - இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அயலவர்களால் தகவல் கொடுக்கப்பட்டது.

இறந்தவரின் சடலம், மானிப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவரின் தந்தையான பஞ்சாட்சரம் ஸ்ரீகாந்தன் - பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர், ஏற்கனவே சிறையிலிருந்தவர் என்றும், தன்னை எவரும் பிணையில் எடுக்கவில்லை என்ற கோபத்திலேயே, குடும்பத்தினரைத் தாக்கினார் என்றும் தெரியவருகிறது. (46,43)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம்

## வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

# மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்

### கோவில் வரலாறு

உலகளந்த பெருமாளாகி உலகை உய்விக்கவந்த திருமாலே யாழ்.நகரில் வண்ணையம்பதியில் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராக வீற்றிருந்து அருள் ஆட்சிபுரியும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆவார்.

இத்தேவஸ்தானம் 14 ஆம் நூற்றாண்டில் அமையப்பெற்றது. இது தமிழ் மன்னன் ஆகிய குணபூசனசிங்கை ஆரியன் காலத்து நெசவுத்தொழிலை விருத்தி செய்யவந்த வைசியத் தோன்றல்கள் ஆகிய பத்மசாலிச்செட்டிப்பிள்ளைகளின் வம்சத்து உதித்த அடியார்க்கு நல்லான் என்பவரினால் வைத்து வணங்கப்பெற்ற தாம்பரவிக்கிரகமாகிய ஆதிவேங்கடேசப் பெருமாளே இத்தேவஸ்தானத்தின் முதன் முதற்தோற்றுவாய் மூர்த்தியாவார்.

இத்தேவஸ்தானமும் இதனை அண்மிய நிலப்பரப்பும் அக்காலத்து அடியார்க்கு நல்லான் வரம்பு என அழைக்கப்பெற்றது. அக்காலத்து இது சிறிய கோவிலாக அமையப்பெற்று, போர்த்துக்கேயரது ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க சமய ஊடுருவினால் இந்த ஆலயம் அழியப்பெற்று, ஒல்லாந்தர் காலத்து புனர்நிர்மாணம் பெற்று ஒரு சிறிய கோவில் உருவில் அமையப்பெற்றது. இதன் பின் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கி.பி. 1835 ஆம் ஆண்டளவில் இச்சாகியத்தினரின் நன்முயற்சியும், வைணவப் பற்றின் காரணமாகவும் இவர்களில் வசதி படைத்தோர் அளித்த நன்கொடைக் காணிகளின் விஸ்தீரணத் தன்மையினால் மஞ்சனக் கிணறு, மகா மண்டபம், மடப்பள்ளி, நவக்கிரக ஆலயம் முதலியன தோன்றப் பெற்றன. கி.பி. 1840 ஆம் ஆண்டளவில் ஸ்ரீ மகாலட்சுமி சந்நிதி வசந்த மண்படம், யாகசாலை முதலியனவும் கொடி ஸ்தம்பம், வாகனங்கள், தீர்த்தக்கேணி முதலியன ஸ்தாபிக்கப் பெற்றும் உற்சவ மூர்த்தி தாம்பரத்தில் வார்க்கப் பெற்று, கி.பி. 1878 ஆம் ஆண்டில் மகோற்சவ வைபவம் தொடங்கலாயிற்று. இதன்பின் கி.பி. 1905 ஆம் ஆண்டு காலத்தில் ஸ்ரீ



வேணுகோபாலர், ஸ்ரீராமர், சீதை, லக்குமணன், ஸ்ரீ ஆஞ்சநேயர் முதலிய விக்கிரகங்கள் தாம்பரத்தில் வடிக்கப்பெற்றன.

1910 ஆம் ஆண்டில் உள்சுற்றுப் பிரகாரம் முழுமையும் ஓட்டினால் வேயப்பட்டது. கி.பி. 1910 முதல் 1912 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிமண்டபம் உருவாக்கப் பெற்றது. கி.பி. 1912 ஆம் ஆண்டிலேயே ஸ்ரீ ஆண்டாள் சந்நிதியும் ஸ்தாபிக்கப் பெற்றது. 1941 ஆம் ஆண்டில் மஹா கும்பாபிஷேகம் ஒன்று மூல மூர்த்திகளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நவக்கிரகக் கோவிலுக்கும் நடைபெற்றன. இதேபோன்று 1972 ஆம் ஆண்டிலும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1948 ஆம் ஆண்டில் ஸ்ரீரங்கநாதசுவாமி இந்தியாவில் உருவாக்கப்பெற்று ஸ்தாபிக்கப்பட்டது. 1950 இல் வெளிவீதியில் ஆஞ்சநேயர் கோவில் உருவாக்கப்பெற்றது.

1960 இல் சித்திரத்தேர் உருவாக்கப் பெற்று அவ்வருடத்திலேயே தேரில் சுவாமி எழுந்தருளினார். 1972 ஆம் ஆண்டில் பிற்பகுதியில் இராஜகோபுர வேலைகள் ஆரம்பிக்கப்பெற்று 1978 ஆம் ஆண்டிலேயே மணிக்கோபுர வேலைகளும் நிறைவுபெற்று பெரிய கண்டாமணி பொருத்தப் பெற்று இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1998 ஆம் ஆண்டில் ஸ்ரீரங்கநாதர் கோபுரவேலை தொடங்கப்பெற்று 2003 ஆம் ஆண்டில் நிறைவுபெற்று இதற்குரிய கும்பாபிஷேகமும், மூலமூர்த்திகளுக்கும் புதிதாக உருகாக்கப்பெற்ற ஸ்ரீசந்தான கோபாலர், ஸ்ரீவேணுகோபாலர், ஸ்ரீராமர், ஸ்ரீ ஆஞ்சநேயர் சந்நிதிகளும் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும், நவக்கிரக சந்நிதிக்கும் கும்பாபிஷேகம் நடைபெறப் பகவான் ஸ்ரீமந் வேங்கடேச வரதராஜப் பெருமாள் திருவுள்ளங் கொண்டுள்ளார். 10.07.2003 நடைபெறும் வண்ணை ஸ்ரீ வேங்கட வரதனது மஹா கும்பாபிஷேகத்தைக் கண்டுகளிக்கவும் யாழ்.குடா மக்கள் அனைவரும் பங்குபெற வேண்டும் என்பது பகவான் நாராயணனதும் எமது தேவஸ்தான மகாசபையினதும் பெருவிருப்பாகும். ஸ்ரீரங்கனது பஞ்சதள கோபுர தரிசனத்தையும் ஸ்ரீவேங்கட வரதனது மஹா கும்பாபிஷேகத்தையும் கண்டு சேவிப்போருக்கு ஸ்ரீமந் நாராயணன் நன்நெறி காட்டுவான். நன்நிதி வழங்குவான், நல்வாழ்வு அளிப்பான் நன்னலம் தருவான் நற்பேறு அருள்வான், "நாராயணன் நாமம் நாள்தோறும் ஓதுபவர் நற்கதி பெறுவர்".

**"தமிழர் வாழ்வுதனைக்க தயவு காட்டும்**
**ஐயா தயா நிதியே தாமோதரா கோவிந்தா**
**உமது பாதங்களைப் பணிகின்றோம்.**
**ஓம் நமோ நாராயணா சரணம்**
**ஓம் நமோ வாசுதேவா போற்றி**
**ஓம் நமோ பத்மநாபா போற்றி"**

**இங்ஙனம்**
**வீ. என். சீ. நாராயணசாமி**
**முன்னைநாள் தலைவர்,**
**தேவஸ்தான மகாசபை.**

## கும்பாபிஷேகத் திருவருட்பேறு எங்கும் பொலிவதாக!

**சொல்லுந் தனையும் தொழுமின் வீழு முடம்பு**
**செல்லும் தனையும் திருமாலை - நல்லிதழ்த்**
**தாமத்தால் வேள்வீயால் தந்திரத்தால் மந்திரத்தால்**
**நாமத்தால் ஏத்துதிரேல் நன்று.**

என உலகரட்சகனாகிய திருமாலுக்குரிய பூசையின் மகத்துவத்தைத் திருவந்தாதிப்பாடல் போற்றுகின்றது. திவ்ய மங்கள சொரூபனாக விளங்கும் திருமாலின் பெருமை அளப்பரியதாகும். விஷ்ணு பரமாத்மாவுக்கு நடைபெறும் பூசை நடைமுறைகள் 'திருவாராதனம்' என்பர். மலர்மாலை கொண்டு ஏத்துதல், வேள்வியால் ஏத்துதல், தந்திரம் கூறும் வழிபாட்டுமுறையால் ஏத்துதல், நாமங்களை உச்சரித்துப் போற்றுதல் எனப்பலவகையாக அவ்வழிபாடு அமையும். இறைவன் எமக்களித்த புலன்களைக் கொண்டு திரிகரண சுத்தியுடன் அவனை வழிபடுதலே "ஆராதனம்" என்பர். இவ்வாறு எங்கும் வியாபித்து அருள்மழை பொழிகின்ற பகவானை மனமுருக ஆராதித்து வழிபாடியற்றுவதற்கு உருவாகிய புனித இடமே திருக்கோயிலாகும். இத்தகைய திருக்கோயில்கள் ஊர்தோறும் எழுச்சிபெற்று மக்களது சமய வாழ்வுக்கு உறுதுணையாக விளங்கி வருகின்றன.

இலங்கையில் பல இடங்களில் எழுந்துள்ள திருக்கோயில்களில் திருமால் பல்வேறு திருநாமங்களில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றமை யாம் செய்த தவப்பயனேயாகும். ஸ்ரீசக்கரத்தாழ்வாராகவும், ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாளாகவும் மக்கள் போற்றி வழிபாடியற்றி வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் வண்ணையம்பதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீவேங்கடேச வரதாரஜப் பெருமானைத் தெய்வீகப் பொலிவுடன் எழுந்தருளச்செய்யும் புண்ணிய கைங்கரியமாக ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டபச்ச உத்தம யாக மஹா கும்பாபிஷேகம் தேவஸ்தானத்தாரினதும், அடியார்களினதும் பக்தியின் பயனாய் நிகழ்வது மகிழ்ச்சிக்குரியதாகும். 'ஈழத்துத் திருப்பதி' என்ற சிறப்புப்பெயருக்கேற்ற வகையில் வண்ணையம்பதியில் திவ்ய ஷேத்திரமாக விளங்கும் இத்திருக்கோயிலில் இராஜகோபுரம் மற்றும் பிரதான ஆலயம், பரிவார ஆலயங்கள் ஆகியவை திருப்பணி மூலம் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்கின்றன. ஸ்ரீரங்கநாதப் பெருமாளுக்கு நூதன பஞ்சதள இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாளின் திருவருள் கும்பாபிஷேகக் கைங்கரியத்தில் ஈடுபட்ட அனைத்து அன்பர்களுக்கும் கிட்டுவதாக!

**நாராயணா எனும் மந்த்ரம் - மனமே**
**நாளும் ஜெபிப்பாய் திவ்ய மோகம் நிரந்தரம்**
**வாராது தீவினைகள் வரதராஜன் அருளால்**
**பாராயணம் என்றும் பக்தியுடன் புரிவாய்**
**ஸ்ரீதரன் மாதவன் சிறந்த அருள்தருவான்**
**பாதமலர் தனைப் பக்தியுடன் துதிப்பாய்**
**பூதலந்தனில் வண்ணைப்பதி வெங்கடேஸ்வரன்**
**மாதவன் மாலவன் மாயவன் திருநாமம்.**

என்ற மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களது கீர்த்தனையை இப்புனித நன்னாளில் சிந்தையிற்கொண்டு நலம் பெறுவோமாக!

**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்,**
**இந்துநாகரிகப் பேராசிரியர்- கலைப் பீடாதிபதி,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## சிறப்புற வாழ்த்துவோர்


உமா. ஸ்ரோர்ஸ்
378(260) காங்கேசன்துறை சாலை,
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ
கெங்கா
உலோக கலையகம்
314, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

உங்களுக்குத் தேவையான புத்தகங்கள், பாடசாலை அலுவலக உபகரணங்களை
மலிவாகவும்நியாய விலையிலும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225542

சகலவித ஆடைத் தெரிவிற்கு
சிவகணேசன் ரெக்ஸைரல்ஸ்
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P.No. 222 2063

22 கரட் தங்கநகைகளுக்கு
வி.எம்.கே ஜுவலர்ஸ்
கண்டி வீதி, சாவகச்சேரி.
TELE: 070-212989,
0777- 723021

GREAVES
தில்லையம்பதி மோட்டோர்ஸ்
இல. 236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2222488, 021-2223820
AGENTS FOR - GREAVES, SPARE PARTS
விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம்
மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

22 கரட் தங்கநகைகள் செய்திட
சாருணி ஜுவல் & கட்டிங் வேக்ஸ்
74, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
✆- 2223502

S.Malavarayar
காப்புறுதி முகவர்
Sri Lanka Insurance Corporation Ltd.
6, Marys Road,
Colombo -04
Mobile : 0777 -301392
Tel: 595330, 588246
Fax: 446874
Air Ticketing for all Major Airlines
யாழ்ப்பாணத்தில் தொடர்பு:
தில்லையம்பதி மோட்டோர்ஸ்
இல. 236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2222488

# யாழ்ப்பாணம்
# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
# மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்

## பிரதமகுருவின் ஆசிச்செய்தி



வடபகுதியின் தலைநகரான யாழ்ப்பாண நன்னகரிலே அமைந்துள்ள புகழ்பெற்ற விஷ்ணு தலங்களுள் ஈழத்துத் திருப்பதி என சிறப்பிக்கப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய திருக்குட திருமஞ்சன பெருவிழா நடைபெறும் இன்றைய பொன்நாளிலே ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வுலகத்து உயிர்கள் மேன்மையடைந்து உய்வதன் பொருட்டு இறைவன் வீற்றிருந்து அருள் செய்யும் இடம் திருக்கோயிலாகும். திருக்கோயில்களில் இறைவன் மேலான பிரம்ம வடிவமாகவும் சர்வமந்திர சொரூபமாகவும் விளங்கிடும் இடம் கருவறை (மூலஸ்தானம்) ஆகும். கருவறையிலிருக்கும் இறைவனின் திருவருளை அதிகரிக்கச் செய்யும் கிரியைகளுள் சிறந் ததே கும்பாபிஷேகமாகும்.

திருக்கோவில்களைப் புதுப்பித்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை மஹா கும்பாபிஷேகங்களை நிகழ்த்த வேண்டுமென ஆகமங்கள் வலியுறுத்துகின்றன.

பிரசித்தி பெற்ற இவ்வாலயத்தில் ஸ்ரீ ரங்கசுவாமிக்கு புதிய இராஜ கோபுரம், பரிவாரமூர்த்திகட்டு புதிய சந்நிதானங்கள் அமைக்கப் பெற்று எழில் மிகு வர்ணந் தீட்டி ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மஹாகும்பாபிஷேக வைபவம் இன்றைய தினம் நிகழ்வதை நாம் எமது கண்களாலே கண்டு தரிசிக்க பெரும் பாக்கியம் செய்திருக்கின்றோம்.

இன்றைய நன்னாளிலே உலக மக்கள் அனைவருக்கும் சாந்தியும் சமாதான சகோதரத்துவ வாழ்வும் எவ்வுயிர்களிடத்திலும் அன்பும், கருணையும் உருவாகி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குரிய சகல சௌபாக்கியங்களும் கிடைக்க பிரார்த்தித்து எமது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**"கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர்**
**எண்ணும் திருநாமம்**
**திண்ணம் நாராயணமே"**

**ஸ்ரீவத்ஸ. வ. இராஜேஸ்வரகுருக்கள்**
**பிரதம குரு, ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள்**
**தேவஸ்தானம், வண்ணார்பண்ணை,**

## பிரதிஷ்டா பிரதமகுருவின் வாழ்த்துச் செய்தி



"மெய்வண்ணம் நினைந்தவர்க்கு மெய்ந் நின்ற வித்தகனும், மைவண்ணம் கருமுகில் போல் திகழ்வண்ணம் மரகதமாகிய, பூலோக வைகுந்தமெனப் போற்றும், ஸ்ரீ ரங்கத்தில், பள்ளி நிறைந் துள்ள புண்ணிய பூமி இலங்காபுரி, இதையே தொண்டரடிப் பொடி யும் "தென்திசை இலங்கை நோக்கி" எனப் பகர்கின்றார். திருவருள் பொழிகின்ற இலங்காபுரியின் சென்னியாகத் திகழ்வது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் மத்தியஸ்தானமாக வண்ணார்பண்ணையில் ஸ்ரீதேவி, பூமிதேவி ஸமேதராய் வேங்கடேச வரதராஜப் பெருமாள் வீற்றிருந்து 'குறைவொன்றும் இல்லாத கோவிந்தனாக, அடியார்கள் குறைதீர்த்து அருள்பாவித்து வருகின்றார்.

வைணவ ஆகமங்களின் பிரகாரம், பெருமாளின் பரம் வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை எனும் ஐந்து வடிவங்களிலும் அர்ச்சை ரூபமரைக உள்ள விக்கிரகங்களைப்பிரதிட்டை செய்து நித்தியம், நைமித்தியம், காமியம் என்ற முறைப்படி கிரியைகளை வழுவாது செய்தல் மரபாகும். இவ்வகையில் ஸ்ரீதேவி, பூமிதேவி ஸமேதராகிய வேங்கடேச வரதராஜப் பெருமாளுக்கு இன்றைய தினம் மஹாகும்பாபிஷேகம் எனும் பெருஞ்சாந்தி நிகழ்த்தி, பெருமாளின் அருள்பேற்றிக்கு உள்ளாகும் பேறு கிடைத்துள்ளது. பெருமாளின் திருமார்பை வாசஸ்தலமாக உள்ள ஸ்ரீமகாலக்ஷ்மியின் நத்திரமாகிய அனுக்ஷமும், வைகுந்தவாசியாகிய திருமாலுக்குரிய ஏகாதசீ திதியும் கூடிய சுபதினத்தில் பிரதிக்ஷ்டா மகஷா கும்பேபிக்ஷேகம் நிகழத் திருவருள் கூடியுள்ளது.

பாபத்தை நீக்குகின்ற ஈழத்துத் திருப்பதியாகிய வ வேங்கடேச வரதராஜப் பெருமாள் "அதிக்ஷியந்தி புவணரனி விஸ்வா" எனும் வேத வாக்கிற்கிணங்க எல்லா உலகங்களையும் காத்தருள்பவர் வ பரம்பொருளாகிய திருமால், அனைத்து ஜவுவராசிகளுக்கும் சுபீட்சத்தையும், நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிகழ அருள் பாலிக்க வேண்டும் எனப் பிராத்தித்து ஆசி கூறுகின்றேன்.

ஸர்வத்ர கோவிந்த நாம ஐங்கீர்தனம்

சுபம்

**பிரம்மஸ்ரீ சாமி**
**சுந்தரேசக்குருக்கள் (தாவடி)**
**பிரதிஷ்டா பிரதமகுரு**

## தேவஸ்தானத் தலைவரின் வாழ்த்துரை.

இன்று வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதனின் கும்பாபிஷேகப் பெருவிழாவாகும். இந் நந்நாளில் பகவானின் திருவருள் வேண்டி இவன் சந்நிதி நாடி குழுமி நிற்கும் சகல அடியார்கட்கும் நல்லருள் பாலிக்கும் வண்ணம் பிரார்த்திக்கின்றாம். இந்தப் பெருவிழாவில் கர்ப்பக்கிருக மூர்த்தியாக ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளுடன் கூடிய ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரரான ஸ்ரீ வரதராஜப் பெருமாள் மூர்த்திக்கும் இவரின் பரிவார மூர்த்திகள் ஆகிய ஸ்ரீ ரங்கநாதசுவாமி, ஸ்ரீ மாகாலட்சுமி, ஸ்ரீஅம்பாள் தேவி, ஸ்ரீ சந்தானகோபாலசுவாமி, ஸ்ரீவேணுகோபாலசுவாமி, ஸ்ரீசீதாதேவி சமேத ராமச்சந்திரமூர்த்தி, நவக்கிரக மூர்த்திகள், ஸ்ரீகருடன், ஸ்ரீஆஞ்சநேயர் முதலிய மூர்த்திகட்கும் இவர்களது சந்நிதிகளுக்கும் இராஜகோபுரம், ஸ்ரீரங்கநாத கோபுரங்களுக்கும் ஸ்தூபி அபிஷேகமும் மூர்த்திகட்கு கும்பாபிஷேகமும் நடைபெறும் சுபவேளையிதுவாகும். இதன் பொருட்டு சிறப்பு மலர் தயாரித்து வெளியீடு செய்யும் ஈழநாடு தின ஏடு பிரசுரஸ்தாபனத்தாரின் நன் முயற்சியைப் பாராட்டுகின்றோம். இச் சிறப்பு மலர் சிறந்துவிளங்கவேண்டும் என்று பணியாற்றிய அனைத்து நல்லுள்ளங்கட்கும் எமது நன்றியும் பகவானது நல்லாசியும் உரித்தாகுக. எமது பகவான் ஸ்ரீ வேங்கடவரதனை தினம் நினைந்து வணங்கும் நல்லடியார் நல்வாழ்வு பெற்று, நலம்பெற்று வாழக்கடவர். அல்லல் படும் தமிழ் இனம் அவன் அருளால் நிறைவான சமாதான சகவாழ்வு மலர என்றும் நாம் அவன்தாள் பணிவோமாக.

வாழ்க! ஓம் நமோ நாராயணா என்னும் நாமம்!

**நா. ஸ்ரீதரன்,**
**தலைவர், வண்ணை ஸ்ரீ வேங்கடேச**
**வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்,**
**யாழ்ப்பாணம்.**

**'தெளிந்த மனமுடையவன் துயருறுவதில்லை, அவாவுறுவதில்லை, எல்லா உயிர்களிடத்தும் சமனாயிருப்பவன் என் மீது மேலான பக்தி பெறுகிறான்'**

**(பகவத்கீதை 18:54)**

**'யாரிடத்தில் உயிர்கள் உற்பத்தியாகின்றனவோ, யாரால் இவ்வையகமெல்லாம் வியாபிக்கப்பட்டுள்ளதோ அவ் ஈஸ்வரனை சுயகருமத்தால் வணங்கி மனிதன் மேன்மையெய்துகிறான்'**

**(பகவத்கீதை 18:46)**

## அருள்மிகு ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத் திருக்குடமுழுக்கு



*யாழ்ப்பாணத்திலே மூன்று சிறப்பான வைணவக் கோயில்கள் இருக்கின்றன. அவை அருள்மிகு பொன்னாலைக் கிருஷ்ணன் கோயில், அருள்மிகு வல்லிபுர ஆழ்வார் கோயில், அருள்மிகு வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் என்பனவாகும். மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்ட கோயில் திருப்பதி திருமிகு வேங்கடேசப் பெருமாளையும், காஞ்சிபுரத்து அருள்மிகு வரதராஜப் பெருமாளையும் ஒன்றாக இணைத்து அமைந்துள்ளது. யாழ்ப்பாண மக்கள் இதனைப் 'பெருமாள் கோயில்' என்றே அழைப்பர்.*

*அருணகிரிநாதர் முருகனைக் குறிக்க 'பெருமாள்' என்னும் சொல்லினைத் தன்னுடைய திருப்புகழிலே கையாளுகின்றார்.*

*'சூரனுடலற வாரிசுவறிட*
*வேலைவிடவல பெருமாளே'*

*என்று அருணகிரியார் பாடுகிறார். முருகனைப் 'பெரும் ஆள்' என்று கூறியது போலத் திருமாலையும் 'பெரும் ஆள்' என்று கூறும் வழக்கமுண்டு. இவ்விருவரையும் 'பெருமாள்' என்று குறிப்பிடுவதற்கு ஒரு பொதுத்தன்மை இருவரிடையேயும் காணப்படுகிறது. இருவரும் திருப்பெருவடிவம் எடுத்தவர்கள். திருமால் கிருஷ்ணவதாரத்திலே சகாதேவனுக்கும், துரியோதனனுடைய அவையிலும், கர்ணனுக்கும் தன்னுடைய திருப்பெருவடிவத்தைக் காட்டினார். வாமண அவதாரத்திலே அவர் பெற்ற திருப்பெருவடிவத்தை 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்ற பாடலடியாலே ஆண்டாள் குறிப்பிடுகிறாள். முருகன் போர்க்களத்திலே சூரபன்மனுக்குத் தன்னுடைய திருப்பெருவடிவத்தைக் காட்டியதை,*

*'கோலமா மஞ்ஞைமீது குலவிய குமரன் தன்னைப்*
*பலனென் றிருந்தேன் மற்றப்பரிசிவை அறிந்திலோனான்*
*மாலயன் தனக்கும் மற்றும் வானவர் தமக்கும் யார்க்கும்*
*மூலகாரண மாய மூர்த்தி இம்மூர்த்தியன்றே'*

*என்று கந்தபுராண ஆசிரியர் கூறுகிறார். திருமாலை 'பெருநிலமெடுத்த பேராளா', 'அடியனேன் பெரிய வம்மானே', 'தமியனேண் பெரிய வம்மனே' என்றெல்லாம் பாடியுள்ளனர். இவ்வாறு எங்களுடைய பெருமாள் கோயிலிலே திருமால் பெரும் ஆளாக வீற்றிருக்கின்றார்.*

*பெருமாளுடைய கோயிலுக்குச் சில திருத்தலங்களும் சிறப்புக்களும் செய்யப்படுகின்றன. அருள்நிறை அரங்கநாதசுவாமி வாயிலிலே புதிய இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இருக்கின்ற இராஜகோபுரமும் புதுப்பொலிவுபெற வர்ணம் தீட்டப்படுகின்றது. இவையாவும் நிறைவுற்ற நிலையிலே வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாளுக்குத் திருக்குடமுழுக்கு நடைபெறவுள்ளது. எம்பெருமான் அருளாலே இத்திருக்குடமுழுக்கு இனிதே நடைபெறும்.*

*புதிய கலியாண மண்டபம் அருகிலிருக்க இருபெரும் இராஜகோபுரங்களைக் கொண்ட கோயிலிலே பூமகளும் திருமகளும் புடை சூழ வீற்றிருக்கும் வேங்கடேச வரதராஜப் பெருமாளுடைய அருளாலே எங்கள் மண்ணிலேயுள்ள மக்கள் அமைதியுடனும், எல்லா நலன்களுடனும் வாழ வழிபிறக்கும் என நம்புகின்றோம். பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண் அச்சுதா! அமரரே! எங்கள் துயர்களையெல்லாம் தீர்த்துத் திருமுழுக்காடி அருள்தரவேண்டுமென இறைஞ்சுகிறோம்.*

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
**தலைவர், தமிழ்த்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## சிறப்புற வாழ்த்துவோர்

**குகன் ஸ்ரோர்ஸ்**
180 (380), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Phone: 021-2222767

**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**அருள் முருகன் நகையகம்**
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**சாரங்கன் நகைமாடம்**
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

✷ இரண்டு வருட உத்தரவாதத்துடன் தரமான Pentium 4 கணனிகளை மலிவான விலையில் பெற்றுக் கொள்ள
✷ உங்கள் கணனிகளை சிறப்பான முறையில் மறுசீரமைத்துக் கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்
**Northern Technology (Pvt) Ltd.**
20, Kannathiddy Road,
Jaffna.
T.P- 021-2225653

**விமாகி**
27/3 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
Floor Tiles, Wall Tiles, Bathroom Fittings, Glassware
இந்தியா, தாய்லாந்து, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மாபிள் வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப்பற்களைப் பொருத்தவும், மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் கிளிப் போடவும் . நாடுங்கள்
**எரிக் கணேஸ்**
மூக்குக் கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்
564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 2222486 கிளை: கொக்குவில், சுன்னாகம்.

**DSI**
பாதணிகளின் யாழ். குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்
**சுப்ப சூஸ்**
75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 2225543

ஓவ்செட் துறைகளின் பயன்பாட்டிற்கோர் சிறந்த வரப்பிரசாதம்
**ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ்**
424, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 - 2222717

**ஸ்ரீ தாமோதர விலாஸ்**
401, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

# மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



அடியார் பெருமக்களுக்கு!

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நகரை ஆண்டு கொண்டிருக்கும் வரதராஜப்பெருமானுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலயம் இன்று புதுப்பொலிவுடன் இரண்டு இராஜகோபுரங்களைக் கொண்டு நிறைவான ஆலயமாக விளங்குகின்றது. காத்தல் கடவுளாம் மஹாவிஷ்ணு அதர்மத்தை இல்லாது செய்யவும் தர்மத்தை நிலைநிறுத்தவும் வேண்டுவோர் வேண்டுவதை வழங்குகின்ற பெருமாளாக இங்கு வீற்றிருக்கிறார். பெருமாளைப் போற்றி வழிபாடு செய்பவர்கள் மன அமைதியையும் சுகமான வாழ்வையும் அடைகின்றாகள். இன்று நடைபெறும் கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகமாகும். இதனைக் கண்ணினாற் பார்த்து மனதால் அனுபவித்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக. இக்கும்பாபிஷேகம் ஆலயத்திற்கும் அவ்விடத்திற்கும் அனைத்து மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்தட்டும். இவ்வாலயத்தை சிறப்பாக நடாத்தும் ஆலய அறங்காவலர் சபையினருக்கும் இக்கும்பாபிஷேகத்தை சிறப்பிக்கும் நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனத்திற்கும் நல்வாழ்த்துக்கள். எங்கும் சாந்தியும் சமாதானமும் நிலைப்பதாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

## இறும்பூது எய்தும் 'பெருமாளே'

அழகோடு செல்வம் அதனோடு ஞான
அருளோடு ஆழும் அதிதீரா!
அடியார்கள் வந்து அழுதேங்க .... அன்பு
அமுதூட்டி வாழ்த்தும் புகழாளா!
எழில் மங்கை யோடு எழுந்திங்குஞ் சூழும்
இடர்போக்கி இன்பம் பொழிவோனே!
இனிதான 'கும்ப அபிஷேக ' நாளில்
இறும்பூது எய்தும் 'பெருமாளே'

சுவர்க்கங்கள் போலத் திகழ்ந்தோங்குங் கோவில்
துளிர்விட்டு மீண்டும் மெருகேற.
சுடர்போல மின்னும் திருக்கோபுரத்தில்
துணையோடு நீயும் முகங்காட்ட .
கவிதைகள் உந்தன் கழல்சேர ... கானக்
கடலுன்னைச் சூழ்ந்துன் புகழ்பாட ...
களிகொண்டுன் தாளில் விழுகின்றோம், எங்கள்
கறைபோக்கு, நாமும் புதிதாக!

- த.ஜெயசீலன்

## இந்து சமய விவகார அமைச்சரின் வாழ்த்துச்செய்தி



இந்துசமயத்தின் முக்கிய பெரும் பிரிவுகளில் ஒன்று வைஷ்ணவம் ஆகும். வைஷ்ணவர்கள் விஷ்ணுவையே முழுமுதற்கடவுளாக வழிபடுகிறார்கள். தமிழ்நாட்டில் வாழும் வைஷ்ணவர்கள் அனைவராலும் கோயில் என்று போற்றப்படும் தலம் ஸ்ரீரங்கம் ஆகும். திருமாலின் நின்ற கோலத்தை திருப்பதியிலும், திருமாலின் சயனகோலத்தை ஸ்ரீரங்கத்திலும் காணலாம் என மாங்காட்டு மறையவனின் கூற்றாக சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. 'சர்வம் விஷ்ணு மயம் ஜகத்' என்பது வைஷ்ணவர்களின் கோட்பாடு ஆகும். 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா எங்கும் கரியநிறம் தோன்றுதையா நந்தலாலா' என மகாகவி பாரதியார் மாயவனின் சர்வ வியாபகத்தை தனது பாடலின் ஊடாக வெளிப்படுத்துகிறார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மாயவனுக்கு சிறப்புமிக்க ஆலயங்கள் உண்டு. யாழ்ப்பாணப் பட்டினத்திலே ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயமும், வடமராட்சியிலே வல்லிபுர ஆழ்வார் ஆலயமும், பொன்னாலையில் வரதராஜப் பெருமாள் ஆலயமும் சிறப்பு மிக்க தலங்களாகக் காணப்படுகின்றன. விஷ்ணு பகவானுடைய பக்தியிலே ஆழ்ந்த ஆழ்வார்கள் பகவான் மீது பத்திரசம் ததும்பும் தோத்திரப்பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார்கள். இவ்வாறு பன்னிரு ஆழ்வார்கள் பாடிய நாலாயிரம் பாடல்கள், நாலாயிரம் திவ்வியப்பிரபந்தம் என்று அழைக்கப்படுகிறது. தாய்மை, காதல் ஆகிய மானுட அனுகுமுறைகளின் ஊடாக ஆழ்வார்கள் விஷ்ணு பகவான் மீது பாடல்களைப் பாடினார்கள். ஆழ்வார்களின் பாடல்களை வைணவர்கள், தேவகானம் எனப் போற்றுகிறார்கள். களங்கமில்லாப் பக்தியினால் பன்னிரு ஆழ்வார்கள் பரந்தாமன் மீது பாடல்களைப் பாடியுள்ளார்கள்.

உலகியல் வாழ்வில் நாம் அனுபவிக்கின்ற துன்பங்கள் துயரங்கள் நீங்க வேண்டுமானால் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற நாராயணனின் திருப்பாதங்களை வணங்குதல்வேண்டும் என்பதை 'துயரறு சுடரடி தொழு தெழு மனனே' என நம்மாழ்வாரின் பாடல் குறிப்பிடுகிறது. பாராளும் பெருமையிலும் பார்க்க பரந்தாமன் புகழ்பாடும் பெருமை சிறப்புடை யது என நினைத்து முடியையே துறந்துவிட்டுச் சென்ற குலசேகராழ் வார் ஸ்ரீரங்கப்பெருமான் மீது பாடிய பாடல் அவருடைய பக்தியின் உயர்வு நிலையை எடுத்துக்காட்டுகிறது. 'படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே' என உள்ளமுருகி அரங்கநாதப் பெருமான் மீது இவர் பாடல்கள் பாடியுள்ளார்.

பல நூற்றுக்கணக்கான மக்களால் பக்தி சிரத்தையோடு நாள் தோறும் வணங்கப்படும் அருள்மிக்க தலமாக வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயம் திகழ்கிறது. நித்திய நைமித்திய கிரியைகள் இங்கு ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தின் பிரதான வாசலில் மிகப்பெரிய கோபுரம், அழகான சிற்பங்களுடன் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஸ்ரீ ரங்கநாதருக்கு ஆலயத்தின் தெற்கு வாசலில் மிகப்பெரிய இராஜ கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோபுர கும்பாபிஷேகத்தை ஒட்டி நமது ஈழநாடு பத்திரிகை வெளியிடும் சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாளின் திருவருட்கடாட்சம் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**தி.மகேஸ்வரன் (பா.உ),**
**இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்.**

## இனிதே நிறைவுற நல்லாசிகள்



ஆழ்வார்களால் ஓங்கி உலகளந்த உத்தமன் பெயர்பாடி எனப் போற்றப்படுகின்ற நெடுமாலாகிய திருமால்தன் வடிவைக் குறுகச் செய்து தேவர்களையும், மனிதர்களையும் வாழ்வித்ததால் உத்தமன் எனக் குறிப்பிடப் படுகின்றான். "தன்னை அழிய மாறியாகிலும் பிறர் வாழ வேண்டும் எனப் பணிபுரிகின்றவனே உத்தமன்." அவதாரங்களினூடு பகவான் புலப்படுத்துகின்ற வாழ்க்கை நெறியும் இதுவே.

உலகிற்குக் காரணமாகவும் காரியப் பொருளாகவும் இருந்து வழிநடத்துபவன் நாராயணன்.

**அர்ச்சாவதாரரூபேண லோகேஸ்மின் சதுரானன!**
**அவதாரம் கரிஷ்யாமி ஹரியாலஷ்ம்யாசமன்விதம்!!**

இக் கலியுகத்தில் திருவுருவ வழிபாடும் நாம சங்கீர்த்தனமுமே வழிபாட்டிற்குரிய இலகுவான சாதனங்களாகும். ஜீவான்மாக்களுக்கு முத்தி அளிக்க வேண்டும் என்பதற்காக பரம கருணையோடு "ஆகமமாகி அண்ணிப்பவன்" போல பகவான் நாராயணன் சிலை வடிவமாக (அர்ச்சாவதாரமாக) பூலோகத்திற்கு வருகிறான். எம்பெருமான் அவதாரம் செய்த இடத்தைச் சுற்றி வலம் வந்து வணங்கவும் தாய்மையாக வைத்துக்கொள்ளவும் ஏற்பட்டவை ஆலயங்கள். பல இன்னல்களால் அமைதியற்று இருக்கும் மனதை அமைதியாகவும், அழகாகவும், ஆனந்தமாகவும் இருக்கின்ற எம்பெருமானின் ஆலயங்களுக்குச் சென்று எம்பெருமானைக் கண்ணுற்று

**"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணை**
**யுண்டவாயன் என்னுள்ளம் கலந்தானை**
**அண்டர் கோன் அணியரங்கன் என்னமுதினைக்**
**கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"**

எனத் திருப்பாணாழ்வார் அனுபவித்ததுபோல அனுபவித்து மனதை ஒருநிலைப்படுத்தி, அமைதியும் ஆனந்தமும் ஏற்பட்டு மோட்சத்தை அடைவதற்கு வழிகாட்டுவதாக யாழ்.நகரின் மத்தியில் நடுநாயகமாக வீற்றிருந்து காத்து அருள்புரிந்து வரும் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் கோவிலில் இன்று குடமுழுக்கு நிகழ்வது பேரருட்திறனுக்குரிய நிகழ்வாகும். 1345 காலப்பகுதியில் மார்க்கண்டேய பக்த சால்யவைசிய கோத்திரத்திலுதித்த அடியார்க்கு நல்லான் என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட இவ்வாலயம் காலந்தோறும் அடியவர்களின் ஆதரவோடு வளர்ச்சிபெற்று கிழக்கிலும் தெற்கிலும் இரு இராஜகோபுரங்கள் மிளிர, பரிவார ஆலயங்கள் சூழ சிறந்து விளங்கி அடியார்களுக்கு இன்னருள் புரிகின்ற பூலோக வைகுண்டமாகத் திகழ்கின்றது. இப்பூலோக வைகுண்டத்தில் எழுந்தருளியுள்ள காத்தற்கடவுளாகிய பெருமாளை வணங்கி இகபர சுகங்களை அடைவோமாக.

**வேறொன்றிலும் புலன்களைச் செலுத்தாது என்னை**
**நன்கு வழிபடுகின்ற பக்தனுடைய யோக க்ஷேமங்களை**
**நான் தாங்குகின்றேன் - ஸ்ரீமத் பகவத்கீதை**

**பிரம்மஸ்ரீ ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்த சர்மா**
B.A.Hons
**விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை**
**யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்**

## விழா சிறப்புற வாழ்த்துவோர்


**லிங்கம் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான ஓவிய வேலைகள்,
டிஜிட்டல் பிரிண்டிங்கில்,
பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள், வீட்டுப்பெயர்,
பாடசாலை மொனிட்டர், பிறிபெற்பச், கீரெக்ஸ்,
சிலைட்,ஸ்ரிக்கர் வேலைகள்
இப்பொழுது மூன்று நாட்களில்
**யசோ**
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-0777-110610

**சானுகா நகைமாடம்**
இல: 200G,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2223700

**DIAL LINKS**

**THE PHONE SHOP**
204, K.K.S Road,
Jaffna.
T.P.-021-2225485

யாழ் நகரில் இணையசேவை
(BROWSING CENTRE)
**Sri Murugan**
Computer Systems,
Communication Service &
Agency Post Office
303, K.K.S Road, Jaffna.

கர்ப்பிணித் தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்றபோஷாக்கு நிறைந்த சத்து மா
**ஜீவாகாரம்**

அண்ணா தொழிலகம்
T.P.-2223565
இணுவில்

**மில்க் வைற்**
த.பெ.இல-77,
யாழ்ப்பாணம்.

சீமெந்து கூரை ஓடுகள், முகட்டோடுகள்
இயந்திரம் மூலம் வடிவமைத்துப் பெற்றிட
**லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை**
பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி,
இணுவில்.

யாழ்ப்பாணம்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

# மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்

## கும்பாபிஷேக தத்துவம்

இறைவன் எழுந்தருளும் இடங்களைக் கும்பம், பிம்பம், தம்பம் என மூவகையாகக் கூறுவர். ஆலங்களைப் புதுப்பித்தற்கு அங்குள்ள பிம்பம், தம்பம் ஆகியவற்றில் விளங்கும் மூர்த்திகளைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து கோயிலைப் புதுப்பித்தபின் அங்குள்ள திருவுருவங்களில் அபிஷேகத்தின் மூலம் மீண்டும் அம்மூர்த்திகளைச் சேர்ப்பித்தலைக் கும்பாபிஷேகம் எனக் கூறுவர். கும்பாபிஷேகம் குடகுழுக்கு, திருக்குட நன்னீராட்டு என்ற பெயர்களாளும் வழங்கப்பெறும். பிரதிஷ்டை எனவும் கூறப்பெறும்.

**பிரதிஷ்டை வகை**

ஆலய பிரதிஷ்டை நால் வகைப்படும். அவை ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம் என்பவாகும்.

**ஆவர்த்தம்**

ஓர் ஆலயத்தைப் புதிதாகக் கட்டி முடித்து பாலாலய மூர்த்தியைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து பூசித்து மூலஸ்தானத்தில் அம்மூர்த்தியை எழுந்தருளச் செய்து அதற்கு அபிஷேகம் செய்தல் ஆவர்த்தம் எனப்படும்.

**அநாவர்த்தம்**

ஆற்றுப்பெருக்காலோ, பெருமழையாலோ, நில அதிர்வுகளாலோ, மணல் மூடியதாலோ பல ஆண்டுகள் பூசை இல்லாமல் இருந்த ஆலயத்தைக் கட்டி முடித்து விக்கிரகங்கள் முதலியவற்றைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்தல் அநாவர்த்தம் எனப்படும்.

**புனராவர்த்தம்**

கர்ப்பக்கிரகம், விமானம், பிராகாரம், கோபுரம், பலிபீடம் முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும், அஷ்டபந்தனத்தில் பழுது உண்டானாலும், விமான விக்கிரகங்களில் பழுது நிகழ்ந்தாலும், வர்ணம் அழிந்திருத்தாலும் சுவாமியைப் பாலாயம் செய்து ஆலயத்தைப் புதுப்பித்து மூலஸ்தானத்தில் மீண்டும் சுவாமியைப் பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகம் புரிதல் புனராவர்த்தம் எனப் பெறும். இது ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் எனவும் வழங்கப்பெறும்.

**அந்தரிதம்**

ஆலயத்தில் திருட்டு நிகழ்ந்தாலோ, சண்டாளன், நாய் முதலியன உள்ளே புகுந்தாலோ, சுவாமியின் பிரத்தியங்கம், உபாங்கம் போன்றவைகளுள் பழுது ஏற்பட்டாலோ உடனே அவைகளைத் திருத்தி, மகா கும்பாபிஷேகம் செய்தல் அந்தரிதம் எனப் பெறும். இதற்கு நாள் நட்சத்திரம் பார்க்கவேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்ய வேண்டுமென்பது ஆகமவிதி. இவ்வாறு செய்யப்படும் மூர்த்திகளிலேயே தெய்வ சாநித்தியம் மிக்கிருக்கும்.

**அஷ்ட பந்தனம்**

எட்டு வகையான மருந்துகளை அந்தந்த அளவோடு கூட்டி மூர்த்திகள் பீடத்திலிருந்து அசையாத வண்ணம் சாத்தப் பெறும் மருந்து "அஷ்ட பந்தனம்" எனப் பெறும். அக்கான் 3 பங்கு, குங்கிலியம் 2 பங்கு, கொம்பரக்கு 1 பங்கு, தேன் மெழுகு, காவிக்கல், செம்பஞ்சு இவை வகைக்கு 3/4 பங்கு, சாதிலிங்கம் 1/4 பங்கு இந்த அளவில் கூட்டி நன்றாக மர உரலில் இடித்துச் சேர்க்கப்பெறும். இம்மருந்தை, மூர்த்திகளுக்குச் சாத்துதல் வேண்டும். இது கும்பாபிஷேகத்தில் செய்யப்படும் முக்கிய கிரியையாகும். சிவசக்தியைச் சிவலிங்கத்தில் என்றும் இருக்குமாறு செய்ய இக்கிரியை உதவுகிறது.



**கிரியைகள்**

கும்பாபிஷேகத்திற்கு அங்கமாகச் செய்யப்படும் கிரியைகள் அறுபத்து நான்காகும். சில ஆகமங்கள் ஐம்பத்தைந்து என்றும் கூறும், அவற்றுள் அனுக்ஞை, கணபதி பூஜை, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ராஷபந்தனம், கும்பஸ்தாபனம், கலாகர்ஷணம், யாகசாலை, பிம்பசுத்தி, ஸ்பர்சாகுதி முதலியன இன்றியமையாதன.

**அனுக்ஞை**

ஆசாரியனைத் தேர்ந்து எடுத்து அவரை இறைவன் அனுமதி பெற்றுக் கும்பாபிஷேகம் செய்வித்தற்கு நியமனம் செய்தலாம்.

**கணபதி பூஜை**

காரியம் இடையூறின்றி நிகழ நிகழ்த்தும் வழிபாடு.

**வாஸ்து சாந்தி**

பூமியைச் சுத்தம் செய்தல்.

**மிருத்சங்கிரணம்:** மண்ணெடுத்தலாகும்.

**அங்குரார்ப்பணம்:** முளையிடுதல்.

**ரஷாபந்தனம்:** காப்புக்கட்டுதல்.

**பிம்பசுத்தி:**

மூர்த்திகளைத் தூய்மை செய்தல்.

**ஸ்பர்சாகுதி:** மூர்த்திகளுக்குச் செய்யப்படும் யாகப்பயன்களை மூர்த்திகளிடம் சேர்த்தல். இவ்வாறே ஒவ்வொரு கிரியையும் யாகசாலையில் நிகழும்.

**கும்பம்:**

யாகசாலையில் எழுந்தருளுவிக்கப் பெறும் கும்பங்கள் அந்தந்த மூர்த்திகளின் திருவுருவங்களாகும். கும்பத்திலமைந்த பொருட்கள் அனைத்தும் அம்மூர்த்திகளின் உடற்கூறுகளாகக் கருதப்படும். கும்பவஸ்திரம் - தோல், மேல்பூசிய செம்மண் - இரத்தம், கும்பத்துமண் - மாமிசம், தீர் - மேதை, சுற்றியநூல் - 72 ஆயிரம் நாடிகள், உள்ளிடு ரத்தினம் - சுக்கிலம், கூர்ச்சம் - எலும்பு, மாந்தளிர் - மயிர், தேங்காய் - சிரம், கீழே பரவும் நெல் முதலியன - ஆசனம், மந்திரம் - பிராணன் இவ்வாறு கும்பம் சிவசொருபமாகப் பாவிக்கப்பெறும். கோயில் திருவுருவங்களிலுள்ள தெய்வீக சக்தியைக் கும்பத்தில் ஆவாகித்து, யாகசாலைக்கு எழுந்தருளச்செய்து உபசரித்து மகிழ்வித்தல் வேண்டும்.

**கலாகர்ஷணம்**

கலைகள் பதினாறு. அவை - அகாரம், உகாரம், மகரம், விந்து, பிறைமதி, நிரோதினி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபினி, வியோமருபை, அநந்தை, அநாதை, அநாகிருதை, சமனை, உன்மனை என்பனவாகும். மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியை எழுப்பி, மனை வரை கொண்டுசென்று, பாகங்களை நீக்கியதுடன் மனையில் சுத்தமானதாகப் பாவித்து, அதன்மேல் இருக்கும் சிவத்தினிடம் சேர்த்துப் பிராசாத மந்திரத்துடன் கலந்த சிவத்தை ரேசகம் என்னும் பிராணாயாம வகையால் கையில் இருக்கும் பூவில் எழுந்தருளச் செய்து, கும்பத்தல் இருக்கச் செய்யும் கிரியை கலாகர்ஷணம் எனப்படும்.

**யாகசாலை:**

யாகசாலை 36 தத்துவ சொரூபமாகவும், சிவபெருமானது அட்டமூர்த்த வடிவமாகவும், ஆறு அத்துவாக்களின் வடிவாகவும் கூறப்படும். யாக மண்டபம் - சாந்தியதீத கலை, பந்தல்கால்கள் - பதம், மண்டப நடு - வர்ணம், கும்பம் - மந்திரம், ஓமப் பொருள் - தத்துவம், யாகசாலை அமைந்துள்ள இடம் - புவனம், நான்கு வாயில்கள் - நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி என்ற கலை, வேதிகை ஆதார சக்தியுடன்கூடியதாக அநந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம் என்ற ஐந்து ஆசனங்களை உடையது.

**கும்பாபிஷேகம்**

யாகசாலையில் ஒன்பது குண்டங்களில் அக்கினி வளர்க்கப்படும். அவை நாற்கோணம், முக்கோணம், அர்த்த சந்திரம் முதலிய வடிவங்களில் காணப்படும் குண்டங்களைச் சுற்றிப் பசுந்தர்ப்பைகளைப் பரப்பி ஆல், அரசு முதலிய சமித்துக்களைக் குண்டத்தில் இட்டு, கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்கினி கொண்டு அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி அத்தெய்வங்களை மனத்தில் தியானித்து, அருக்கு, அருவம் என்னும் கருவிகளைக் கொண்டு நெய் சொரிந்து அவி வளர்க்கப்படும். மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றாலும் வழிபாடு நிகழும். ஓமகுண்டத்தில் எழும் புகையும், வேதம், சிவாகமம், திருமுறை ஒலிகளும், அன்பர்களின் நல்லெண்ணங்களும் எங்கும் வியாபித்திருக்கின்ற இறைவனது அருட்சக்தியைத் தூண்டிக் கும்பத்தில் பிரகாசிக்கச் செய்யும். அப்போது கும்பம் முழுமையான தெய்வீக சக்தியோடு திகழும். இவ்வாறு யாகசாலையில் நடைபெறும் கிரியைகள் முற்றுப்பெற்றவுடன், அச்சக்தி ஆலயத்திலுள்ள மூர்த்திகளுக்குத் தருப்பைக் கயிறு, பொன், வெள்ளிக் கம்பிகளால் சேர்ப்பிக்கப்படும். அதன்பின் கும்பத்திலுள்ள நீர், சிகரங்களுக்கும் பிம்பங்களுக்கும் அபிஷேகம் செய்யப் பெறும். விமான கலசம், மூலமூர்த்தியின் சக்தியை உலகெங்கும் பரவச்செய்து நன்மைகளை உலகிற்கு உண்டு பண்ணும்.

**மகாபிஷேகம்**

கும்பாபிஷேகம் செய்வித்தபின் இறைவன் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளுக்கு முறைப்படி விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வித்ததற்கு மகாபிஷேகம் என்று பெயர்.

**மண்டலாபிஷேகம்**

கும்பாபிஷேகம் செய்த நாளிலிருந்து 45 நாட்களுக்கு மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேகம் செய்வித்துப் பூர்த்திசெய்வதை மண்டலாபிஷேகம் என்று கூறுவர்.

**கும்பாபிஷேகப் பலன்**

கும்பாபிஷேகம் பெருஞ்சாந்தி எனப் பெயர் பெறும். திருஞானசம்பந்தர் சிறந்த ஆலய விழாக்களைக் குறித்து அருளிச் செய்த பூம்பாவைத் திருப்பதிகத்தில் பெருஞ்சாந்தி விழாவைக் கண்டுகளிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். கும்பாபிஷேகம் செய்தல், செய்வித்தல், துணைபுரிதல், கண்டுகளித்தல் ஆகியன மிக்க சிவபுண்ணியத்தை நமக்கு ஈட்டித்தரும் சிறப்புடையன. பெருஞ்சாந்தி விழாவைச் செய்பவர் - செய்விப்பவர் காண்பவர்கள் - இருமை இன்பங்களையும் எய்தி இன்புறுவர்.

மதுரகவி.
காரை.எம்.பி.அருளானந்தன்

உள்ளூரிலேயே கடந்த 22 வருடங்களுக்கு மேலாக மக்களுக்கு
உன்னத சேவையாற்றும் ஒரே ஸ்தாபனம்
☆ மின்சார உபகரணங்கள்
☆ P.V.C நீர்க்குழாய்கள் அதற்கான இணைப்புகள்
☆ மின் அலங்காரப் பொருட்கள்
☆ குளிர்சாதனப்பெட்டி, வாஷிங் மெஷின்கள்
இன்னும் பலகையான மின்சாரத்தில் இயங்கும்
பொருட்களை பெற்றுக் கொள்ள
சுந்தர்சன்
மத்திய சந்தை முன்பாக, மானிப்பாய்.
T.P.-2222751

ஆசியாவின் நம்பர் 1 சீமெந்து
SLS-107 அங்கீகாரம் பெற்றது
ISO -9002 தரம் பெற்றது
BSS -12-1991 தரத்திற்கு அமைவானது
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து
ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்
ஈஸ்வரபகவான் & கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021- 2222350

பசுக்கள், இடபங்கள் வதைசெய்தல்
மகா கொடிய பாவமாகும்



எம் பெருமானுடைய மகா கும்பாபிஷேக நிகழ்வின் இத்தினத்தில்
இருந்தாவது இந்த பசு வதைக்கின்ற நிகழ்வைநிறுத்துவதற்கு
இந்து மக்களும் மற்றும்சகல மதங்களை தழுவும்மக்களையும்
பணிவுடன் வேண்டுகின்றோம்.
இன்பமே சூழ்க!
எல்லோரும் வாழ்க!
கோகுல ராான்ஸ்போட்
வேணி களஞ்சியம்
165, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

சுத்தமான நல்லெண்ணெய்
தரமான எள்ளில் சுகாதார
முறைப்படி தயாரிக்கப்பெற்றது.
விசேஷம்
SPECIAL
PURE GINGELLY OIL
A Product Of Multii -
Oil Industries Limited Inuvil Srilanka.